விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspapet in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 135 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 19 வியாழக்கிழமை (02.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## கிளிநொச்சியில் எழுச்சி பெற்ற
# தமிழரசுக் கட்சியின் மே தின ஊர்வலம்



(கிளிநொச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தமிழ்த் தேசிய மே தின ஊர்வலமும், கூட்டமும் நேற்றுப் புதன் 15

## முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு
# சர்வதேச நீதி வேண்டும்
## வவுனியாவில் எழுச்சியுடன் முன்னணியின் மே தினம்




(வவுனியா)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதான மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் வவுனியாவில் நேற்று எழுச்சியுடன் இடம்பெற்றது.

முன்னதாக வவுனியா பண்டார 15

## எமது ஆட்சியில் 13ஆவது திருத்தம்
# முழுமையாக அமுல்படுத்தப்படும்
## மே தினக் கூட்டத்தில் சஜித்




(கொழும்பு)

எமது ஆட்சியில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

*(02ஆம் பக்கம் பார்க்க)*

## எரிக் சொல்ஹெய்ம் மண்டைதீவுக்கு விஜயம்



04

## பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு
## ரூ.1700 சம்பளம் வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பளம் உயர்வை வழங்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

33(1) (அ) ஊதிய சபைகள் கட்டளைச் 15

## லாண்ட் மாஸ்ரர் - ஹயஸ் கைதடி நுணாவிலில் விபத்து
## ஒருவர் பலி ; நால்வர் படுகாயம்

(சாவகச்சேரி)

லாண்ட் மாஸ்ரரும் ஹயஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி-நுணாவில் பகுதியில் ஏ9 வீதியில் நேற்று புதன்கிழமை காலை 5 மணியளவில் இவ் விபத்து இடம்பெற் 15

## தமிழரசுக் கட்சியின் எதிர்காலத்தை மக்கள் மன்றத்திடம் கையளிக்கின்றேன்
## மே தினக் கூட்டத்தில் சிறீதரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியையும் அதன் எதிர்காலத் தலைமைத்துவத்தையும் மக்கள் மன்றத்தின் முன் கையளித்து, தமிழ்த் தேசிய மே நாளன்று புரட்சிகர அரசியல் பயணமாக எனது அரசியல் பயணத்தை ஆரம்பிக்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 15

## புங்குடுதீவில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் மீன் பிடிக்கச் சென்ற ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவுப் பகுதியைச் சேர்ந்த கதிரவேல் சுப்பிரமணியம் (வயது-64) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக 15

## அரசின் அடக்குமுறைகளை உடைத்தெறிவோம்
## ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தின நிகழ்வு மானிப்பாயில்



(யாழ்ப்பாணம்)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மே தின நிகழ்வு நேற்று மானிப்பாய் பிரதேச சபையின் பொதுநோக்கு மண்டபத்தில் “அரசின் அடக்குமுறைகளை உடைத் தெறிவோம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

நிகழ்வானது மங்கல விளக் 15

## இருபாலையில் மூதாட்டியை தாக்கிவிட்டு கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்.இருபாலை டச்சு வீதியில் தனிமையில் வசித்து வந்த மூதாட்டி ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்கள் குறித்த மூதாட்டியை தாக்கி கொள்ளை 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு

## பகிரங்க ஏலம்

### 1. இரும்பு/அலுமினியப்பொருட்கள்

ஆலய பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இரும்புகள் மற்றும் அலுமினிய பொருட்கள் என்பவை 2024.05.11 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது.

1.1 பொருட்களைப் பார்வையிட விரும்புபவர்கள் ஆலய நிர்வாக பணிமனையுடன் தொடர்பு கொண்டு பார்வையிட முடியும்.

1.2 ஏலத்தில் தெரிவு செய்யப்படுபவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையை முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

1.3 அன்றைய தினம் பொருட்களை தாங்களே கோயில் வளாகத்தில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும்.

### 2. தற்காலிக கடைகள் அமைத்தல்/ உடைதேங்காய்

கோவிலின் 2024 ஆம் ஆண்டின் உயர்திருவிழா 2024.06.07 ஆம் திகதி அன்று ஆரம்பமாகி 2024.06.22 ஆம் திகதி அன்று நிறைவுபெறவுள்ளது. அக்காலப் பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடைதேங்காய் என்பவற்றுக்கான பகிரங்க ஏலம் 2024.05.11 ஆம் திகதி காலை 11.30 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம்பெறும். ஏலத்தில் பங்குகொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

2.1 குளிர்பானக்கடைகள் நடத்துவோர்கள் முறையான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றிருப்பதோடு சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் பேணவேண்டும்.

2.2 தேநீர் கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

2.3 ஏலத்தில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையில் மூன்றில் ஒரு பங்கினைச் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்வதோடு மீதித்தொகையினை பத்தாம் நாள் மகோற்சவத்திற்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு.

(C-0246)


## முழுமையாக...

கொழும்பு புறக்கோட்டையில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருத்தப்பட்ட மக்கள் சார்பான சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் எமது ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சிறுவர், மகளிர் உரிமைக்கான ஜனாதிபதி செயலணி, இளைஞர் ஜனாதிபதி செயலணி, சுயாதீன ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு எமது ஆட்சியில் நிறுவப்படும் என்றும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மேலும் நாம் ஆட்சி அமைத்தால் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் எந்தவித மான மாற்றமும் இன்றி முழுமையாக அப்படியே அமுல்படுத்தப்படும் என்றார். (ம-7,10)


## கடை வாடகைக்கு தேவை

யாழ் நகரில் இயங்கிவரும் நிறுவனம் ஒன்றிற்கு பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கான கடை ஒன்று யாழ் நகரிற்குள் வாடகைக்கு தேவை.

**076 561 7856**
**076 791 6017**

(C-0249)


## மூதா...

யடித்துச் சென்றுள்ளார்கள். நேற்று அதிகாலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்த மூதாட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-7,10)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் தமிழ்ப் பாட ஆசிரியர்
**ந.சசிகுமார்** அவர்களின்
அன்புத் தந்தையார்

### முத்து நடராஜா
(ஓய்வு பெற்ற கணித பாட ஆசிரியர்)

அவர்கள் காலமான செய்தியறிந்து நாம் துயருறுகின்றோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை எமது பாடசாலை சமூகம் தெரிவித்துக்கொள்கின்றது.

தோற்றம் 11.12.1939 மறைவு 27.04.2024


ஆசிரியர், அதிபர்
நலன்புரிச் சங்கம்
யா/இணுவில்
மத்திய கல்லூரி

(00339)



## மரண அறிவித்தல்

தோற்றம் 07 - 04 - 1952



மறைவு 01 - 05 - 2024

### திருநாவுக்கரசு மகேந்திரன்

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் அம்பாள் வீதி, நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு மகேந்திரன் அவர்கள் நேற்று 01.05.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - பராசக்தி தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - கனகம்மா மற்றும் காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் இந்திராணி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பிறேமநாயகி(அமுதா) அன்புக் கணவரும் தர்சிகா(லண்டன்), மயூரன், மகிந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுரேஸ்குமார்(லண்டன்), நர்மிலா, துளசிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிதின், கவின், கிரன், கேசிகன், லருசிகன் ஆகியோரின் அன்பு பேரனும் இந்திராணி காலஞ்சென்றவர்களான செல்வராணி, ஜெயராணி மற்றும் விஜயராணி காலஞ்சென்ற ஜீவராணி மற்றும் சுரேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவராசா, பாலசுப்பிரமணியம் அமரர் நிமலராசா, சிறிதரன், சுந்தரராஜா, சாந்தி, சிறிகாந்தன், ஸ்ரீநாதன், ஸ்ரீகுமார், ஸ்ரீகண்ணன், உமா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.05.2024 வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு பி.ப 2.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

077 349 9674
077 644 1614

(627)

தகவல்:
குடும்பத்தினர்



## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

தாயின் மடியில் 06 . 06 . 1937



இறைவன் அடியில் 03 . 04 . 2024

கடந்த 03.04.2024 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் செகநாதபிள்ளை உலகநாதபிள்ளை
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் – சுகாதாரத் திணைக்களம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 03.05.2024 வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று தொடர்ந்து 11.00 மணியளவில் சபிண்டீகரண கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். மறுநாள் (04.05.2024) சனிக்கிழமை பருத்தித்துறை சூரிய **மஹால் மண்டபத்தில்** ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும்.

இந் நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சிவபதி,
வியாபாரி மூலை,
பருத்தித்துறை.

(C-0248)

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி (சி- 0245) மே, 11,12. 2024.

# மீண்டும் குறைக்கப்படவுள்ள மின்சார கட்டணம்-இந்திக்க அனுருத்த

(கொழும்பு)

**மே மாதத்தில் மின்கட்டணத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பு காணப்படுவதாக மின்சக்தி - எரிசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மே மாதத்தில் மற்றுமொரு கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இதுவரை திரட்டிய தரவுகளை இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு வழங்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# பிரேமதாசவின் நினைவுதினம் நேற்று அனுஷ்டிப்பு



(கொழும்பு)

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் 31 ஆவது நினைவு தினம் நேற்று புதன்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களின் பங்கேற்புடன் கொழும்பு, புதுக்கடை பகுதியில் அமைந்துள்ள ரணசிங்க பிரேமதாசவின் உருவச்சிலை வைக்கப்பட்டுள்ள இடத்தில் நினைவேந்தல் இடம் பெற்றது. (நி-6)

# நிதி இராஜாங்க அமைச்சர் ஜோர்ஜியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க ஜோர்ஜியா சென்றுள்ளார்.

ஆசிய அபிவிருத்திவங்கியின் வருடாந்த மாநாடு இன்று முதல் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை ஜோர்ஜியாவின் தலைநகர் டிபிலிசியில் நடைபெறவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உறுப்பினரான இலங்கை தனது நிதி வசதிகள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு தேவையான ஆதரவைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு ஏனைய உறுப்பு நாடுகளுடன் கூட்டுறவை ஏற்படுத்துவதற்கான சிறந்த வாய்ப்பாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (நி-6)

# டீசல் விலை குறைந்தாலும்

## பேருந்து கட்டணம் குறையாது- பேருந்து உரிமையாளர்கள்

(கொழும்பு)

டீசல் விலை குறைக்கப்பட்டாலும் பேருந்து கட்டணத்தை குறைக்க இயலாது என பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜூலை மாதத்திலேயே பேருந்துக் கட்டணங்களை குறைக்க முடியும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, 371 ரூபாவாக காணப்பட்ட ஒக்டேன் 92 ரக பெற்றோல் 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 368 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 20 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.அதன் புதிய விலை 420 ரூபாவாகும்.

ஓட்டோ டீசலின் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 333 ரூபாவாகும்.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 9 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் புதிய விலை 377 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் விலை 30 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதுடன் அதன் புதிய விலை 215 ரூபாவாக அமைந்துள்ளது. (நி-6)

# பரீட்சைக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை நடத்துவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன், மழையுடன்கூடிய அவசர நிலைமைகள் ஏற்பட்டால், அதற்குத் தேவையான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கல்லூரியின்
ஆசிரியர்
திரு.தே.பிரபாகரன்
அவர்களின்
அன்புத் தாயார்

அமரர். தேவேந்திரன்
தையல்நாயகி (0038)

அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# குறைவடைந்த சீமெந்து விலை

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சீமெந்து விலையை குறைக்க சீமெந்து நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இதன்படி 50 கிலோ கிராம் சீமெந்து மூட்டையின் விலையை 50 ரூபாவினால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய விலை திருத்தத்தின் படி சீமெந்து மூட்டை ஒன்றின் விலை 2400 ரூபாவாக இருக்கும் என அந்த நிறுவனங்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (நி-6)

# போலித் தகவல் வழங்கியிருந்தால் 'அஸ்வெசும' நிறுத்தப்படும்

(கொழும்பு)

போலியான தகவல்களை வழங்கி அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் பயனாளிகளைக் கண்டறிவதற்காக விசேட வேலைத் திட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், போலியான தகவல்களை வழங்கி அஸ்வெசும நலன்புரிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்வது உறுதி செய்யப்பட்டால், அவ்வாறான தரப்பினருக்கான கொடுப்பனவு இடை நிறுத்தப்படும் எனவும் நலன்புரி நன்மைகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் கிங்ஸ் வேட்டை... சிதறுண்ட சென்னை 'கோட்டை'



## • வீணானது ருதுராஜின் ஆட்டம்
## • இறுக்கத்தில் பிளே ஓப் வாய்ப்பு

சென்னை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் கைவிட, 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பஞ்சாப்பிடம் வீழ்ந்தது.

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த ஐ.பி.எல்., போட்டியில் நடப்பு சம்பியன் சென்னை, பஞ்சாப் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

**ருதுராஜ் அரைச்சதம்**

சென்னை அணிக்கு அணித் தலைவர் ருதுராஜ் - ரகானே ஜோடி ஆரம்பம் வழங்கியது. மறுபக்கம் 200ஆவது "ரி20" போட்டியில் களமிறங்கிய ரபாடா வீசிய முதல் ஓவரில் 4 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட்டன. அர்ஷ்தீப் வீசிய அடுத்த ஓவரில் ருதுராஜ், 2 பவுண்டரி அடித்தார். வழக்கம் போல நிதானமாக விளையாடிய ரகானே, அர்ஷ்தீப் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி ஆறுதல் கொடுத்தார்.

சாம் கர்ரான் வீசிய 6ஆவது ஓவரில் ரகானே மூன்று பவுண்டரி அடிக்க, சென்னை அணி 55/0 ஓட்டங்கள் (6 ஓவர்) எடுத்தது. அடுத்த இரண்டு ஓவரில் சென்னை அணி 5, 4 என எடுக்க அணியின் ஓட்ட வேகம் அப்படியே மந்தமானது.

போட்டியின் 9ஆவது ஓவரை வீசிய ஹர்பிரீத் பிரார், ரகானே (29), துபேவை (0) அவுட்டாக்க, ரசிகர்கள் "ஷாக்" ஆகினர். ஜடேஜா (2) ஏமாற்றினார். சென்னை அணி 14.5ஆவது ஓவரில் 100 ரன்கள் எடுத்தது. இந்நிலையில் ரபாடா "வேகத்தில்" ரிஸ்வி (21) ஆட்டமிழந்தார்.

16.2 வது ஓவரில், இப்போட்டியின் முதல் சிக்சரை அடித்த ருதுராஜ், 44ஆவது பந்தில் அரைச்சதம் கடந்தார். இவர் 48 பந்துகளில் 62 ஓட்டங்கள் எடுத்து, அர்ஷ்தீப் பந்தில் போல்டானார். மொயீன் அலியும் (15) நிலைக்கவில்லை. அர்ஷ்தீப் வீசிய கடைசி ஓவரில் தோனி (14), தலா ஒரு பவுண்டரி, சிக்சர் அடித்தார்.

20 ஓவர்களில் சென்னை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

**பேர்ஸ்டோவ் அபாரம்**

பின் களமிறங்கிய பஞ்சாப் அணி வீரர்கள் ஓட்ட வேட்டையில் ஈடுபட்டனர். சென்னை அணியின் சேப்பாக்கம் கோட்டையை தகர்த்தனர் பிரப்சிம்ரன் (13), பேர்ஸ்டோவ் (46) ஜோடி ஆரம்பம் கொடுக்க, ரூசோவ் 23 பந்துகளில் 43 ஓட்டங்கள் எடுத்தார். பின் சஷாங்க் சிங், கர்ரான் இணைந்து அணியை எளிதாக வெற்றி பெறச் செய்தனர்.

பஞ்சாப் அணி 17.5 ஓவர்களில் 163/3 எடுத்து வெற்றி பெற்றது. கர்ரான் (26), சஷாங்க் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (7,10)

## எரிக் சொல்...


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ். எம். சார்ள்ஸ் ஆகியொர்ம் யாழ்ப்பாணம் மண்டைதீவு பகுதிக்கு நேற்று கள விஜயத்தில் ஈடுபட்டனர்.

கண்டல் தாவரங்களினால் இயற்கையாக அமைந்த நன்மைகள் பற்றியும், மண்டைதீவில் கண்டல் தாவரங்களின் பரம்பல் தொடர்பிலும், இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. வெள்ள அனர்த்தத்தை தவிர்க்கவும், நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கவும் இப்பிரதேசத்தில் வளரும் கண்டல் தாவரங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது.

அந்தவகையில் அவ்வாறான பங்களிப்பை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டது. (ம-7,10)


## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 03 . 1943



இறப்பு 01 . 05 . 2024

### பொன்னம்பலம் யோகேஸ்வரன்

(முன்னாள் பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்)

புலோலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஒழுங்கைத் தோட்டம் வல்வெட்டி, உண்டுவத்தை அல்வாய் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் யோகேஸ்வரன் அவர்கள் 01.05.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தவேல் - கௌரிஅம்பாள் தம்பதியரின் பாசமிகு மருமகனும் கமலவதனாவின் அன்புக் கணவரும் ஹரிகரன் (கனடா), தசரதன் (இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சினி (கனடா), தமயந்தி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமாவும் தரண்யா (கனடா), அபிநயா (கனடா), ஸஜிநயா (இலங்கை) ஆகியோரின் பேரனும் ரத்தினம் (அமரர்), சண்முகநாதன் (அமரர்), தர்மரத்தினம், மனோரஞ்சிதம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.05.2024) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் உண்டுவத்தை அல்வாயில் (பாரதிதாசன் நூல் நிலைய விளையாட்டு மைதானத்துக்கு முன்னால்) உள்ள மகனது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


உண்டுவத்தை,
அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் (தசரதன்) [illegible]

(C-0252)



## கண்ணீர் அஞ்சலி



யாழ்.பல்கலைக்கழக நண்பி **நிர்மலாதேவி** அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் குஞ்சுத்தம்பி ஆறுமுகம்

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர் தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(இ)

பிரிவால் துயருறும் :
1989/1990 யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவ நண்பர்கள்



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

### கூறுவிலை கோருதல்

ஆலய பாவனையிலுள்ள சுவாமி காவும் வாகனங்களுக்கான வர்ணம் பூசுவதற்கு தகுதி வாய்ந்த கலைஞர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

1. கூறுவிலைப் ப்டிவத்தை 1000/- செலுத்தி ஆலய நிர்வாகப் பணிமனையில் பெற்றுக் கொள்ள வேண்டும்.
2. ஆலய வர்ணப்பூச்சு வேலைகளில் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும்.
3. ஆலயத்திற்கு வருகை தந்து வாகனங்களைப் பார்வையிட்டு கூறுவிலையினை பூரணப்படுத்தலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கூறுவிலைப் படிவத்தினை நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியினிலோ அல்லது பதிவஞ்சல் மூலமோ செயலாளர், அறங்காவலர் சபை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு எனும் முகவரிக்கோ 11.05.2024ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்
செயலாளர், அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில், நயினாதீவு.

(C-0246)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மேதின பேரணி யாழ்ப்பாணத்தில்





(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மேதின பேரணியும் கூட்டமும் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது.

நல்லூர் ஆலயத்திற்கு அருகில் இருந்து ஆரம்பித்த பேரணியானது நல்லூர் கிட்டு பூங்காவில் நிறைவடைந்து அங்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர் சங்க பிரதிநிதிகள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# வீட்டிற்குள் நுழைந்த 8 அடி நீளமான முதலை


(வவுனியா)

வவுனியா கணேசபுரத்தில் வீட்டிற்குள் நுழைந்த 8 அடி நீளமான முதலை ஒன்று மக்களால் பிடிக்கப்பட்டது.

முதலையை அவதானித்த வீட்டின் உரிமையாளர் வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து வருகை தந்த வன ஜீவராசி திணைக்கள அதிகாரிகள் முதலையை மீட்டதுடன் அதனைப் பாதுகாப்பாக எடுத்துச் சென்றனர். (நி-6)


## விற்பனைக்கு




**KORD, KORA**

**அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு**

தொடர்புகளுக்கு

**076 097 3121**


## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் 20.05.2024

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் உற்சவம் 20.05.2024 திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இவ்வுற்சவம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அறிவிக்கப்படுகின்றது.

1. உணவக, குளிர்பான உரிமையாளர்கள் காவடி செடில் குத்துவோர் சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக செயற்பட வேண்டும். இது தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் 16.05.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆலய வளாகத்தில் இடம்பெறும். இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சுகாதாரப்பகுதியினரின் மற்றும் நிர்வாகத்தினரின் அனுமதி பெற்றவர்கள் மட்டும் கடைகளை நடாத்த அனுமதிக்கப்படுவர்.

**வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்குதல்**

வியாபார நிலையங்களுக்கான இடம் வழங்குதல் 16.05.2024 வியாழக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 19.05.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிவரை வழங்கப்படும்

பொருட்கள் ஏற்றி வரும் வாகனங்கள் பொருட்களை இறக்கிய பின் ஆலய வளாகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும்

**மின்விநியோகம் கூறுவிலை கோரல்**

ரியூப்லைட் 1200, சோடியம் குமிழ் 150 பொருத்தப்பட வேண்டும். குறைந்தது 500 ரியூப்லைட் பொருத்தக் கூடியவர்களும் கூறு விலையை சமர்ப்பிக்க முடியும். மின்பிறப்பாக்கிகளின் விபரத்துடன் 04.05.2024 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

தலைவர்,
ஆலய பரிபாலன சபை,
வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்.

தொடர்பு:- 077 089 1776
077 936 2643
077 162 8750 (சி-0244)

# இராசிபலன்

02.05.2024 சித்திரை 19, வியாழக்கிழமை நவமி முன்னிரவு 10.59 மணிவரை அவிட்டம் முன்னிரவு 11.07மணிவரை சுபநேரம் 7.27-8.57மணிவரை இராகுகாலம்-1.27-2.57 மணிவரை சந்திராஷ்டமம் - மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்

**மேஷம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பழகும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பொறுப்புக்கள் அதிகரிக்கலாம்.

**துலாம்:** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**மகரம்:** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்

**ரிஷபம்:** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**சிம்மம்:** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சிந்தனை ஆற்றலால், சிறப்படைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்:** தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மிதுனம்:** பகை விலகி பாசம் கூடும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்

**தனுசு:** நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு

**மீனம்:** தொழில் ரீதியான அலைச்சல்கள் இடம்பெறலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்பட நேரிடலாம், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

அடக்கமான இதயம் அனைவருடைய அன்பையும் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விவசாய குழுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விவசாய குழுக் கூட்டம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. மாவட்ட விவசாயம் சார்ந்த பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடி அவற்றிற்கு தீர்வு கண்டு மாவட்ட விவசாயத்தை மேம்படுத்தும் நோக்கில் இக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

பிரதேச மட்ட விவசாய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மேலதிக தீர்மானங்கள் குறித்தும் பிரதேச செயலாளர்களால் கலந்துரையாடப்பட்டது. கடந்த வருடம் நடைமுறைப்படுத்தப் பட்ட விவசாய நவீன மயப்படுத்தல் திட்டம், விவசாய நவீனமயப் படுத்தலினால் எதிர்கொண்ட நன்மை மற்றும் சவால்கள், தற்போது அதிகரித்து வரும் தென்னை மரத்தை பாதிக்கும் வெண் ஈ தாக்கம், அதனை கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்கள், விவசாயத்துறையின் புள்ளி விபரங்களை துல்லியமாக மேற்கொள்ளல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இதன்போது யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக சிரேஷ்ட விரிவுரையாளர் அரசகேசரி, மாவட்ட விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கமநல அபிவிருத்தி ஆணையாளர், கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி ஆணையாளர், அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர், மீன்பிடி உதவிப் பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், மாவட்ட புள்ளிவிபர வியலாளர், விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள், வங்கி மற்றும் காப் புறுதி சேவை வழங்குநர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(நி-6-33)

# 3 வாள்கள் மீட்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் பகுதியில் உள்ள வெற்றுக் காணிக்குள் இருந்து மூன்று வாள்கள் மீடகப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த காணிக்கு சென்ற பொலிஸார் மூன்று வாள்களையும் மீட்டுள்ளனர்.

வாள்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்ய ப்படாத நிலையில், அது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# சொல் ஹெய்ம்-சிறீதரன் எம்.பி சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் .நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் குலாட்டி ஹிமான்ஷு உள்ளிட்ட குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்திருந்தனர்.

இதன்போது எரிக் சொல்ஹெய்ம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது சமகால நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-33)

# நெடுங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்


(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

இதன்போது கல்வி, விவசாயம், வனவளம், கூட்டுறவு போன்ற விடயங்களில் அவதானம் செலுத்தப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் கு.திலீபன், இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானும் பிரதேச திணைக்கள அதிகாரிகள் மற்றும் மாவட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (நி-6)

# 'உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம்' வவுனியாவில் மே தின ஊர்வலம்





(குருமன்காடு)

உழைக்கும் மக்கள் ஒன்றிணைவோம், நாட்டின் வளங்களைப் பாதுகாப்போம் எனும் தொணிப்பொருளில் புதிய ஜனநாயக மாக்சிசலெனினிசக் கட்சியின் மேதின ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நேற்றுக் காலை வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய மேதின ஊர்வலம் பஜார்வீதி ஊடாக வவுனியா நகர மண்டபத்தை அடைந்தது.

இதன்போது மேதினப்பேரணியில் உணவுப் பொருட்கள் எரிபொருட்களின் விலைகளைக் குறை,ஐ.எம்.எப் ஆலோசனைகள் நிபந்தனைகளால் நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை நாசமாக்காதே,வற்வரி, மின்சாரம் உள்ளிட்ட கட்டணங்களின் அதிகரிப்பை உடன் குறை,அந்நியக் கம்பனிகளுக்கும், பெரு முதலாளிகளுக்கும் வழங்கும் வரிச்சலுகையை உடன் நிறுத்து,தேசிய இனங்கள் மீதான பேரினவாத ஒடுக்கு முறைகளை உடன் நிறுத்து, தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்களின் சுயாட்சி உரிமைகளை வழங்கு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் இடம் பெற்றது.

குறித்த பேரணியில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள் பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டிருந்ததுடன் அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியிருந்தனர். (நி-6-250)


## யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)
## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் 1989 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தாலும் திருத்தம் செய்யப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமை புரியும் திரு கிறகோரி சந்திரசேகரன் ஆகிய எனக்கு கையளிக்கப்பட்டு 2021.07.01ஆம் திகதிய 2234/39 ஆம் இலக்கமுடைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட அரச வர்த்தமானி மூலமாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிற்கு அமைவாக மேற்படி சங்கத்தின் 08 கிளைகளுக்குமான கிளைக்குழு தெரிவிற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களைப் பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

- அதற்கு அமைய இக் கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
- கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களில் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எது குறைவோ அத்தொகையாகும்.
- தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களை தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இதில் இருவராவது 18-35 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு மேற்கொள்ளுவார்.
- இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கும் மேற்பட்ட வேட்பாளருக்கிடையே சம வாக்குகள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
- தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்க செயலாளருக்கும் ஆணையாளருக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

**கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரங்கள்**
**கிளைப் பொதுக் கூட்டங்கள் நடைபெறும் திகதியும் காலமும்**
**2024.05.04 சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி**

| தொடர் இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 01 | முனீஸ்வரன் | சங்க காரியாலய மேல்மாடி 330, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | திரு.அருளானந்தம் தயாளன் |
| 2 | 02 | குருநகர் | சங்க காரியாலய மேல்மாடி 330, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | திரு.பாலச்சந்திரன் பாலரவி |
| 3 | 03 | இராசாவின் தோட்டம் | சமாச அச்சக கட்டிடம் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | திரு. கனகரட்ணம் திஸாகரன் |
| 4 | 08 | நாவாந்துறை | அண்ணா சனசமூக நிலையம் பொம்மைவெளி | திரு.தங்கராசா கண்ணதாசன் |
| 5 | 09 | குருநகர் | சமாச அச்சக கட்டிடம் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | திரு. இரத்தினராசா கஜந்தன் |
| 6 | 10 | பிறவுன் வீதி | காந்திஜி சனசமூக நிலையம், கொக்குவில் மேற்கு, கொக்குவில். | திரு.சபாரத்தினம்.அருள்நாதன் |
| 7 | 11 | ஓட்டுமடம் | சமாச அச்சக கட்டடம் கே.கே.எஸ் வீதி,யாழ்ப்பாணம் | திரு.இராஜசிவம் தனுசன் |
| 8 | 13 | றக்கா வீதி | சமாச அச்சக கட்டிடம் கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் | திரு.யோசேப் ஜெகதாஸ் |

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், இல 357, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

ஒப்பம்-திரு.கி.சந்திரசேகரன், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

1974 இல் இவ்வளாகம் தொடங்கிய காலத்தில் இருந்து காலத்துக்கு காலம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டிருந்தது. ஆரம்பத்தில் மானிடவியல் பீடம் திருநெல்வேலியிலும் விஞ்ஞான பீடம் வட்டுக்கோட்டையிலும் இயங்கியது. வட்டுக்கோட்டையில் வசதிகள் மிகக் குறைவாக இருந்ததால் விஞ்ஞான பீடத்தையும் திருநெல்வேலிக்கு இடமாற்றம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. விஞ்ஞான பீடத்தை திருநெல்வேலிக்கு இடமாற்றுவதற்காக புதிய கட்டடங்கள் கட்டி முடிக்க முன்பே விஞ்ஞானபீடம் திருநெல்வேலிக்கு வந்துவிட்டது. இதனால் நீண்டகாலம் விஞ்ஞான பீடம் இட நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்பு பிரிவை எடுத்தது தேவையற்ற ஒரு நடவடிக்கையாக மக்களால் கருதப்பட்டது. ஒரு நல்ல கல்விப்பணி செய்த இப்பிரிவு வீணாகச் செயல் இழக்க வைக்கப்பட்டதுடன் அங்கிருந்து பெறப்பட்ட நூல்களும் திருப்பிக் கொடுக்கப்பட்டன.


1980 களில் இருந்த யாழ்ப்பாணப் பிரதேசம் யுத்த நிலைமை காரணமாக பதற்றநிலை நிறைந்ததாக மாறிக் கொண்டு வந்ததும் 1983 இல் திருநெல்வேலி தபால் பெட்டி சந்தியடி குண்டு வெடிப்பில் இராணுவ வீரார்கள் சிலரின் மரணமும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்களும் பல்கலைக்கழக செயற்பாட்டைப் பாதித்தன. மேலும் 1983 இல் நாடு தழுவிய ரீதியில் ஏற்பட்ட கலவரத்தால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் புதிய பொறுப்புக்களை ஏற்க வேண்டி இருந்தது.

1986 களின் பிற்பகுதிகளில் ஜப்பான் அரசாங்கம் இலங்கையிலுள்ள மூன்று மருத்துவ பீடங்களுக்கு போதனா வைத்தியசாலைகள் அமைக்க உடன்பட்டு இருந்தது. இம் மூன்று போதனா வைத்தியசாலைகள் முறையே பேராதனை, கராப்பிட்டி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைய இருந்தன. பேராதனை, கரப்பிட்டி போதனா வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டுவிட்ட நிலையில் யுத்தம் காரணமாக திருநெல்வேலியில் அமைய இருந்த போதனா வைத்தியசாலை அமைக்கப்படாமை யாழ்ப்பாண மருத்துவ பீடத்திற்கு பெரும் ஏமாற்றமாக இருந்தது.

1987 இல் இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களால் பல்கலைக்கழகத்துக்கு பாரிய இழப்பு ஏற்பட்டது. அன்றைய துணைவேந்தர் பேராசிரியர் நித்தியானந்தன் நாலாவது முறையாக துணைவேந்தர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதனால் ஏற்பட்ட பிரச்சினைகளால் பல்கலைக்கழக நிர்வாகம் சில பிரச்சினைகளை எதிர்கொண்டது. மேலும் மருத்துவ பீடாதிபதி, கலைப் பீடாதிபதி பதில் துணைவேந்தராக கடமையாற்ற அனுமதி அளிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1980 களின் பிற்பகுதியில் பேராசிரியர் A.துரைராஜாவின் முயற்சியால் பெரும் சிரமத்தின் மத்தியில் பல்கலைக்கழகம் ஓரளவுக்குப் புணர்நிர்மானம் செய்யப்பட்டது.

1990 களில் ஆரம்பத்தில் கோட்டை யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை செயலிழந்து மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இதனால் .மருத்துவ மாணவர்களின் கல்வி பாதிப்புக்குள்ளாகியது.

குடாநாட்டில் யுத்த நடவடிக்கைகள் விரிவடையத் தொடங்கினதால் A9 வீதி மூடப்பட்டு விட்டது. பல்கலைக்கழகத்துக்குத் தேவையான பொருட்கள் யாவும் கடல் வழியாக பெரும் சிரமத்தில் கொண்டுவர வேண்டியிருந்தது. மாணவர்களும் விரிவுரையாளர்களும் கிளாலிக் கடல் வழியாகவோ அல்லது விமானம் மூலமாகவே தெற்குக்கு பயணம் செய்யும் நிலை




ஏற்பட்டது. மின்பிறப்பாக்கிகள் மூலமே கல்வி செயற்பாடுகளுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டியதாக இருந்தது.

1990 களில் இங்கு கல்வி பயின்ற முஸ்லீம் மாணவர்களும் மற்றும் சேவையிலிருந்த முஸ்லீம் ஆசிரியர்களும் இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இடம்பெயர்ந்து சென்ற மாணவர்களுக்கு கொழும்பு பேராதனை இடங்களில் வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இதனால் இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன்களையும் யாழ்ப்பாண பல்கலைக்கழமே கவனிக்க வேண்டியிருந்தது. இம் மாணவர்களின் இடப்பெயர்வினால் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டது.

1995 இன் ஆரம்பத்திலிருந்து 'ரிவிரச' இராணுவ நடவடிக்கை குடாநாட்டின் வடபகுதியில் இருந்து தெற்கு நோக்கி நகரத் தொடங்கியது. இந்நடவடிக்கையின் பல்கலைக்கழகத்தை இயக்குவது கடினமாகிக் கொண்டு இருந்தது. இந்நிலையில் 1995 ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி வலிகாமம் மக்களின் ஒட்டு மொத்தமான இடம்பெயர்வினால் பல்கலைக்கழக செயற்பாடு பெருமளவு ஸ்தம்பித்தது. சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெயர்ந்த பணிமனையும் கிளிநொச்சி விவசாய பீடமும் செயற்பட்டன. இதனையடுத்து யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை செயற்பாடு முழுமையாக செயலிழந்தது மாத்திரமல்லாது அங்கிருந்த பொருட்களும் இடம் மாற்றம் செய்யப்பட்டன. இதனால் மருத்துவ பீட செயற்பாடு முற்றாக ஸ்தம்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

1996 ஏப்ரலில் சாவகச்சேரி இராணுவ நடவடிக்கையால் மக்கள் மீள யாழ்ப்பாணம் திரும்பியதும் 1996 மே நடுப்பகுதியில். இருந்து பல்கலைக்கழக புனருத்தாரண பணிகள் ஆரம்பமாகி 1996 ஜூனில் பல்கலைக்கழகம் ஓரளவு இயங்கத் தொடங்கியது. இடம்பெயர்ந்து பல இடங்களில் இருந்த மாணவர்களை பொலிஸ் அனுமதி பெற்று திருகோணமலையிருந்து கடல் வழியாக அவர்களை யாழ்ப்பாணம் அழைத்து வருவது மிகப் பெரிய சிரமமான பணியாக இருந்தது. இருந்தும் பல்கலைக்கழகத்தின் கடின முயற்சியால் ஓரளவுக்கு நிலைமை சீர்செய்யப்பட்டது.

1996 ஆம் ஆண்டு இறுதியில் கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையால் கிளிநொச்சி விவசாயபீடம் சகலவற்றையும் இழந்து யாழ்ப்பாணம் திரும்பியது. இப்பீடத்தை தற்காலிக ஒழுங்கமைப்பில் மருத்துவ பீடத்தை மையமாகவும் புதிய வகுப்பறைகள் துரித கதியில் அமைத்தும் மற்றும் வீடுகளை வாடகைக்கு எடுத்தும் நிலைமையை சீர் செய்ய வேண்டியிருந்தது.

கிளிநொச்சியில் விவசாயபீடம் முன்னர் இயங்கிய பகுதியில் இராணுவத்தின் நிலை கொண்டு இருந்ததால் கிளிநொச்சியில் புதிய இடத்தைத் தெரிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் பலரது முயற்சியாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாலும் அறிவியல்நகர் பிரதேசம் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்தது. இன்று இந்நகரில் விவசாயபீடம், பொறியியல் பீடம், தொழில்நுட்பபீடம் என்பன அமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழத்தின் கடும் பிரயத்தினால் அறிவியல் நகர் நன்கு விருத்தி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருந்த வவுனியா வளாகம் தனிப்பல்கலைக்கழகமாக பிரிந்து சென்றது வட மாகாண மக்களின் நலனுக்கு சாதகமற்றது எனக்கருத்து நிலவுகிறது. வவுனியா வளாகம் தொடர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துடன் இருக்க வேண்டும் என்பதே பொது மக்களின் நிலைப்பாடாக இருக்கிறது என்பது தெரிய வருகிறது.



பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

இப்பல்கலைக்கழகம் ஆரம்ப காலத்திலிருந்து வளப்பற்றாக்குறையையும், யுத்தப் பாதிப்பை எதிர்கொண்டே வந்தது. மிகவும் சாதகமற்ற இடர்கொண்ட காலங்களைக் கடந்து வந்த போதும் துணைவேந்தர்கள், கல்வி, கல்வி சாரா ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவைகளால் பல்கலைக்கழகம் தரங்குன்றாது செயற்பட முடிந்தது. தென்னிலங்கை பல்கலைக்கழகங்கள் மாதிரியல்லாமல் இப்பல்கலைக்கழத்தின் செயற்பாட்டிலும் வளர்ச்சியிலும் துணைவேந்தர்கள் பெரும் பங்கு வகிக்க வேண்டிய பங்கு இருந்து வருகின்றது.

மருத்துவத்துறையினரும் சிவில் சமூகத்தவரும் ஜப்பான் அரசாங்கத்திற்கு கொடுத்த அழுத்தம் மற்றும் திருநெல்வேலியில் அமைய இருந்த போதனா வைத்தியசாலை அமைக்கப்படாது போன விடயத்தை பல முறை எடுத்துச் சொன்னதினால் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் JICA நிறுவனத்தால் மருத்துவக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

1974 இல் சிறிய வளாகமாக ஆரம்பித்த இப்பல்கலைக்கழகம் தன் பொன்விழாக் காலத்தில் 11 பீடங்களையும் 72 கல்வித்துறைகளையும், நான்கு கல்வி அலகுகளையும் கொண்டு பெரு வளர்ச்சி கண்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. இன்று பல்கலைக்கழகத்தில் கல்வி சார் பணியில் 1107 விரிவுரையாளர்களும் 1090 கல்விசாரா ஊழியர்களும் உளர். கடந்த சில வருடங்களில் குறிப்பிடத்தக்க சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பேராசிரியர்களாக பதவி உயர்வு பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியது. அதற்கப்பால் பகுதிநேர விரிவுரையாளர்கள், பயிற்சியாளர்கள் என பலருக்குத் தொழில் வழங்கியுள்ளது. மேலும் 12,000இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இப்பல்கலைக்கழகம் கல்விப்பணிகளுக்கப்பால் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதார இயக்கத்திலும் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இப்பல்கலைக்கழக வளர்ச்சிக்குப் பங்களித்தவர்கள் யாவரும் பாராட்டிற்குரியவர்கள்.

இன்றைய துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜாவின் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் மேலும் வளர்ச்சி பெற்று நாட்டிற்கும் பிரதேசத்திற்கும் பெரும் பணியாற்ற வேண்டும் என வாழ்த்துகின்றேன். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## கட்டுக்குள் அடங்காமல் பற்றி எரியும் காட்டுத்தீ



(டில்லி)

கொடைக்கானல் மேல் மலைக் கிராமங்களிலுள்ள காட்டுப் பகுதிகள் மற்றும் தனியார் தோட்டப்பகுதிகள் என்பனவற்றில் 5 நாட்களுக்கும் மேலாக காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது.

இதனால், முன்னெச்சரிக்கையாக பூம்பாறை, மன்னவனூர், கூக்கால் உள்ளிட்ட மலைக் கிராமங்களுக்கு சுற்றுலாப்பயணிகள் வாகனம் மற்றும் கனரக வாகனங்கள் செல்லத்தடை விதிப்பதாக வனத்துறையினர் அறிவித்துள்ளனர்.

தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வனத்துறை, தீயணைப்புத் துறையினர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதனால் தற்காலிகமாக இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, திருவண்ணாமலை மாவட்டத்தில் 6500 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட ஆத்துரை- பெரணம்பாக்கம் காப்புக்காடு தீப்பற்றி எரிந்துள்ளது. தீயில் சில அரிய வகை உயிரினங்கள் மற்றும் மூலிகைச் செடிகள், மரங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாக கூறப்படுகிறது.

தீயணைப்புத் துறையினர் மற்றும் வனத்துறையினர் இணைந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மது அருந்துவதற்காக காட்டுப்பகுதிக்குள் நுழைந்தவர்கள் தீ வைத்திருக்கலாம் என சந்தேகிக்கும் பொலிஸார் அவர்களை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளனர். (நி-6)

# நோக்கம் நிறைவேறு

# போர் தொட

## நெதன்யாகு சூளு

(காசா)

**ஹமாஸ் உடனான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை ட்படுத்தாமல் தெற்கு காஸா நகரமான ரஃபா மீது யெடுப்பை நடத்தும் என பிரதமர் பெஞ்சமின் நெ வித்துள்ளார்.**


நேற்று முன்தினம் செவ்வாயன்று பேசிய பிரதமர் நெதன்யாகு,ரஃபாவில் இஸ்ரேல் தனது அனைத்து நோக்கங்களையும் அடையும் வரை போர் தொடரும் என்று வலியுறுத்தினார்.

"போரின் அனைத்து இலக்குகளையும் அடைவதற்கு முன்பு நாம் போரை நிறுத்துவோம் என்ற கேள்விக்கு இடமில்லை" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"நாங்கள் ரஃபாவிற்குள் நுழைவோம், மொத்த வெற்றியை அடைவதற்காக, நாங்கள் ஹமாஸ் பட்டாலியன்களை அகற்றுவோம்" என்று நெதன்யாகுவின் அலுவலகம் வெளி

## டில்லியில் சுமார் 60 பாடசாலைகளுக்கு

# வெடிகுண்டு மிரட்டல்




(டில்லி)

டில்லி, தேசிய தலைநகர் வலயப் பகுதிகளில் அமைந்துள்ள 60 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிகுண்டு மிரட்டல், மின்னஞ்சல் மூலம் நேற்றுக் காலை வந்துள்ளதாக தீயணைப்புத் துறை இயக்குநர் அதுல் கார்க் உறுதி செய்துள்ளார்.

இதனையடுத்து, அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதுடன், வெடிகுண்டு நிபுணர்களுடன் பொலிஸார் மற்றும் தீயணைப்புத்துறையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சோதனை நடவடிக்கைகளையடுத்து, செய்தியாளர்களை சந்தித்த டில்லி பொலிஸ் துணை கண்காணிப்பாளர், அனைத்து பாடசாலைகளையும் சோதனை செய்துள்ளதாகவும், வெடிகுண்டு மிரட்டல் வெறும் வதந்தி என தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் இதுகுறித்து பதற்றமடைய வேண்டாம் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, மிரட்டல் வந்த ஒரு பாடசாலையை சோதனை செய்த டில்லி துணைநிலை ஆளுநர், வி.கே.சக்சேனா, இது குறித்தான விரிவான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (நி-6)

## 46,955 புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து வைத்த பிரான்ஸ்



(பாரிஸ்)

கடந்த வருடம் நாடு முழுவதும் உள்ள தடுப்பு முகாம்களில் 46,955 புலம்பெயர்ந்தோரை பிரான்ஸ் அதிகாரிகள் தடுத்துவைத்திருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

SOS Solidarity மற்றும் France Terre d'Asile உள்ளிட்ட புலம்பெயர்ந்தோருக்கான உரிமை குழுக்களின் அறிக்கை மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் ஆண்கள் எனவும் ஐந்து வீதம் மாத்திரமே பெண்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 120 இற்கும் மேற்பட்டவர்கள் தாம் 18 வயதுக்குட்பட்டவர்கள் என தெரிவித்தும், பிரான்ஸ் அதிகாரிகள் அவர்களை இளைஞர், யுவதியாகவே கருதியதாக தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பாலும் அல்ஜீரியா, துனிசியா மற்றும் மொராக்கோ ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றும் வரை
# டரும்!
## ந்தரை

த்தைகளைப் பொரு
மீது, ஸ்ரேல் படை
நெதன்யாகு தெரி



யிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ரபா நகரில் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்கள் அடைக்கலம் புகுந்துள்ள நிலையில், அங்கு இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தினால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என கூறப்படுகிறது. (நி-6)

# நான்கு மாதங்களில் 40 இலட்சம் பேருக்கு டெங்கு
## அதிர்ச்சியில் உறைந்து போயுள்ள பிரேசில்

(பிரேசில்)

தென் அமெரிக்க நாடான பிரேசிலில் கடந்த 4 மாதங்களில் இதுவரை 40 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டு உள்ளது.


கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 10 இலட்சம் பேருக்கு டெங்கு பரவிய நிலையில் தற்போது 4 மடங்கு அதிகரித்துள்ளது.

மேலும் அவர்களில் சுமார் 2 ஆயிரம் பேர் சிகிச்சை பலனின்றி பலியாகி உள்ளனர்.

எனவே டெங்கு காய்ச்சலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பொதுமக்களுக்கு தீவிர விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

இதேவேளை ஏடிஸ் எஜிப்டி வகை கொசுக்களால் டெங்கு காய்ச்சல் பரவுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. (நி-6)

# 100 அடி பள்ளத்தில் பாய்ந்த பேருந்து
## 7 பேர் உயிரிழப்பு



(டில்லி)

இந்தியாவின் சேலம் மாவட்டத்தில், சுற்றுலாத் தலமான ஏற்காட்டில், தனியார் பேருந்தொன்று 100 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

60 பயணிகளை ஏற்றிக் கொண்டு ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து, மலைப் பாதை வழியூடாக சேலத்துக்கு பயணித்த பேருந்தொன்று இவ்வாறு நேற்று முன்தினம் மாலை பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த பேருந்து மலைப்பாதையின் வளைவில் திரும்பிய போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, திடீரென 100 அடி பள்ளத்தில் செங்குத்தாக வீழ்ந்ததாக கூறப்படுகின்றது.

விபத்தின்போது, பேருந்தில் பயணித்த பயணிகளின் கூச்சல் சத்தத்தைக்கேட்டு, அருகிலிருந்த பொதுமக்கள் மற்றும் பிற வாகன சாரதிகள் அனைவரும் உடனடியாக செயற்பட்டு விபத்தில் சிக்கியவர்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக மீட்டு, சேலம் அரச மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 5 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், படுகாயமடைந்து சிகிச்சைபெற்று வந்தவர்களில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மேலும் பேருந்தின் சாரதி மீது வழக்குப்பதிவு செய்துள்ள ஏற்காடு பொலிஸாரினால் இச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-6)

# அமெரிக்காவின் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் பதற்றம்
## 100 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீன ஆதரவு மாணவர்கள் கைது



(வோஷிங்டன்)

அமெரிக்காவின் கொலம்பிய பல்கலைகழத்தின் வளாகத்திலிருந்து பாலஸ்தீன ஆதரவாளர்களான மாணவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பல்கலைகழகத்தின் கட்டடத்தை பாலஸ்தீன ஆதரவு மாணவர்கள் ஆக்கிரமித்து 24 மணிநேரத்தின் பின்னர் அவர்கள் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்களை கைவிலங்கு அணிவித்து பொலிஸார் பேருந்தில் அழைத்து சென்றனர்.

மாணவர்கள் வெட்கம் வெட்கம் என கோசங்களை எழுப்பினர்.

இரண்டு வாரங்களாக பல்கலைகழகத்தை சுற்றி முகாமிட்டிருந்த பாலஸ்தீன ஆதரவு மாணவர்களையும் பல்கலைகழக கட்டடத்திற்குள் நுழைந்தவர்களையும் அங்கிருந்து அகற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பல்கலைகழகத்திலிருந்து வெளியேறுவதற்கு பல்கலைகழக நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை பாலஸ்தீன ஆதரவு மாணவர்கள் ஏற்றுக்கொள்ளாததைத் தொடர்ந்து மாணவர்களை வெளியேற்றுவதற்கு பொலிஸாருக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி வழங்கியிருந்தது.

இஸ்ரேலுடனான உறவுகளைத் துண்டிக்க வேண்டும் எனக் கோரி அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



களை



ம் மாத
ா குறிப்
ம் மேற்
வயது
ா தெரி
அதிகா
இளை
கருதி
ப்படுகி
ஜீரியா,
மொரா
ளைச்
வாறு
டுள்ள
கங்கள்
(நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிக்காத நிலையில் மோ.ஷெல் அடையாளம்



(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காணியொன்றில் இருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெடிக்காத நிலையில் மோட்டார் ஷெல் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திப் பணி ஒன்றிற்காக ஜே.சி.பி வாகனத்தால் குழி வெட்டிய போதே எறிகணை அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் வெடிபொருளை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

# கஞ்சாவுடன் இருவர் நாவற்குழியில் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழி பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு கஞ்சா போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


நாவற்குழிப் பகுதியில் போதைப்பொருள் விற்பனை இடம் பெறுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 1200மில்லிகிராம் மற்றும் 960மில்லி கிராம் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். (நி-6-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 120 | 100-130 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 175 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 100 | 70-80 |
| தக்காளி | 120 | 100 | 100 | 80-90 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 140 | 100-130 |
| கோவா | 160 | 150 | 200 | 150 |
| கரட் | 300 | 200 | 250 | 200 |
| பூசணி | 100 | 140 | 120 | 80 |
| புடோல் | 120 | 200 | 130 | 100 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 120 | 300 | 200-350 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 300 | 210 |
| பாகற்காய் | 300 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100 | 150 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 120 | — |
| பயற்றங்காய் | 200 | 180 | 200 | 200-250 |
| லீக்ஸ் | 300 | 220 | 280 | 200 |
| பீற்றூட் | 200 | 150 | 280 | 200 |
| கறிமிளகாய் | 300 | 150 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 300-600 |
| போஞ்சி | 200 | 300 | 350 | 250 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 |
| தேசிக்காய் | 800 | 800 | 700 | 600-750 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 50-70 |
| இராசவள்ளி | 350 | 400 | 600 | 250 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 200 | — |
| முள்ளங்கி | 100 | 100 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 100 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 100 |

# இன்று ஒரு தகவல் 111



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புரியாத புதிர்

அமெரிக்காவில் ஒரு தொழில் அதிபர். ஜார்ஜ் டி.பிரைசின் என்று பெயர். சில வருடங்களுக்கு முன்பு ஒரு நாள். அவர் செயிண்ட் லூயிஸிலேயிருந்து நியூயோர்க் போய்க் கொண்டு இருந்தார். வழியிலே லூயிஸ் வில்லி என்று ஒரு டவுன். ஒரு நாள் அங்கே தங்கி விட்டுபோக வேண்டிய சூழ்நிலை. இதுக்கு முன்னாடி அவர் அந்த ஊருக்குப் போனதே இல்லை. அது தான் முதல் தடவை. இந்த ஊரிலே கொஞ்சம் சௌகரியமாக தங்க வேண்டும் என்றால் எங்கே தங்கலாம்? என்று விசாரித்தார். பிரவுன் ஹொட்டலுக்கு போங்கள் என்று சொன்னார்கள். அது எங்கே இருக்கிறது என்று கேட்டு தெரிந்து கொண்டு அங்கே போய் சேர்ந்தார். ரூம் ஒன்று வேண்டும் என்று கேட்டார். கிடைத்தது. ரூம் நம்பர் 307 என்று சொல்லி சாவியையும் கொடுத்தார்கள். வாங்கிக் கொண்டு நேராக ரூமுக்குத் தானே போக வேண்டும் அங்கே போகவில்லை. கடிதங்கள் கொடுக்கின்ற கவுண்டருக்குச் சென்றார். சும்மா ஒரு தமாஷ் பண்ணவேண்டும் என்று நினைத்துக் கொண்டு என் பேரு ஜார்ஜ் டி பிரைசன் ரூம் நம்பர் 307 எனக்கு ஏதாவது கடிதங்கள் உண்டா? என்று கேட்டார். அங்கே நின்று கொண்டிருந்த பெண் பொறுமையாக உண்டு என்று சொல்லி விட்டு ஒரு கடிதத்தை எடுத்து இவரிடம் நீட்டினார். தமாஷா கேட்ட இவருக்கு நிஜமாகவே அதிர்ச்சியாக இருந்தது. அவசரம் அவசரமாக அந்த கடிதத்தை வாங்கிப் பார்த்தார். அதிலே இவரது பெயர் சரியாக எழுதப்பட்டிருந்தது. ரூம் நம்பர் 307 என்றும் சரியாக போடப்பட்டிருந்தது. இவர் பரபரப்பாக மேற்கொண்டு விசாரிக்க ஆரம்பித்தார். கடைசியில் தான் விடயம் புரிந்தது. இவருக்கு முன் அந்த ரூமில் தங்கியிருந்தவர் பெயரும் பிரைசன் தான். இனிஷியலும் அதே தான். அவர் மொண்ட்ரியல் இல் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கின்றார். இவர் நேராக அவரைச் சென்று பார்த்து பேசி அதை உறுதி செய்து கொண்டாராம்.

அதுசரி இது தற்செயலாக நடந்த ஒரு ஒற்றுமை என்பதா? அல்லது இதிலே வேறு ஏதாவது விடயம் இருக்கிறதா? இது மாதிரி ஒன்று இரண்டு நடந்தது என்றால் தற்செயல் என்று சொல்லலாம். ஆனால் உலகம் முழுவதும் இது மாதிரி அதிசய நிகழ்சிகள் அவ்வப்போது நடந்து கொண்டு தான் இருக்கின்றது.

1900 ஆடி 28 ஆம் திகதி இத்தாலியில் ஒரு ராஜா. கிங் அம்பர்டோ என்று பெயர். அவரும் அவருடைய உதவியாளர் ஒருவரும் மிலன் நகரத்துக்குப் பக்கத்திலே உள்ள மோன்சா என்ற இடத்துக்கு வந்து இருந்தார்கள். மறுநாள் அங்கே நடக்க இருந்த விளையாட்டுப் போட்டிக்கு பரிசு கொடுப்பதற்காக ராஜா அங்கே வந்திருந்தார். முதல் நாள் இரவு அவர் ஒரு உணவு விடுதிக்கு சாப்பிடுவதற்கு போனார். அங்கே இவருக்காக ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. அந்த விடுதி சொந்தக்காரரை பார்த்தவுடன் ராஜாவிற்கு பெரிய அதிர்ச்சி! ஏன்?

இவரு மாதிரியே அவரும் இருந்தாராம்! கண்ணாடியில் பார்ப்பது மாதிரி. முகம், உடம்பு எல்லாம் ஒரே அச்சிலே போட்டு எடுத்தது மாதிரி இருந்தது. ராஜா மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுத்தார். உங்க பெயர் என்ன என்று கேட்டார். இவரது பெயரையே அவரும் சொன்னார். உங்கள் பிள்ளை பெயர் என்ன என்று கேட்டார் ராஜா. இவரது பிள்ளை பெயரையே அவரும் சொன்னாராம்- விக்டோரியா என்று.

இரண்டு பேரும் ஒரே வருடம், ஒரே மாசம், ஒரே திகதி, ஒரே ஊரிலே பிறந்து இருக்கிறார்கள். மார்ச் 14, 1844 ஆம் ஆண்டு! இரண்டு பேருக்குமே ஒரே நாளே திருமணமாகியிருக்கின்றது. ஏப்ரல் 22, 1863 ஆம் ஆண்டு. இரண்டு பேரும் ஒரே பெயருள்ள பெண்களையே திருமணம் செய்து இருந்தார்கள்-மார்கரிட்டர். அந்த ராஜாவிற்கு எந்த திகதியில் முடிசூட்டு விழா நடந்ததோ அதே திகதியில் தான் இவரது ஹொட்டல் திறப்பு விழாவும் நடந்திருக்கிறது. ராஜாவிற்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. நாளை நடக்க இருக்கும் பரிசளிப்பு விழாவுக்கு இவரையும் வரசொல்லி விட்டு புறப்பட்டார்.

மறுநாள் விழா நடந்தது. இவர் வரவில்லை. ராஜா விசாரித்தார் " எங்கே அவர்? என்று. ஒரு துப்பாக்கி சம்பவத்திலே நேற்று இரவு அவர் இறந்து போய்விட்டார் என்று சொன்னார்கள். ராஜாவிற்கு இன்னமும் அதிர்ச்சி. சரி அவருடைய ஈமச்சடங்கு எப்போது நடக்கும் என்று விசாரியுங்கள் நானும் வருகிறேன் என்றார் ராஜா. இப்படி சொல்லிக் கொண்டு இருக்கும் போது ஒரு கொலைகாரன் ராஜாவை சுட்டுவிட்டான். மூன்று தடவை சுட்டான். முதல் குண்டு தவறிப் போய்விட்டது. அடுத்த இரண்டும் நெஞ்சிலே பாய்ந்து ராஜா இறந்து போய்விட்டார்.

இதுக்கு என்ன சொல்கிறீர்கள்? இவ்வளவும் தற்செயலான ஒற்றுமையா என்று சொல்ல முடியுமா? அப்படி நினைத்து பல அதிசய சம்பவங்களை நாம் அலட்சியமாக ஒத்துக் கொள்கிறோம். ஆனால் இது அதைவிட பெரிதாக உள்ள ரகசியம். இன்னமும் முழுதாக அதை தாம் கண்டுபிடிக்கவில்லை. ஒருவருடைய மனநிலை- ஊழ்வினை இது எல்லாம் சம்பந்தப்பட்ட விடயமாம் அது. கீழைநாட்டு மனோதத்துவ சாஸ்திரம் அப்படி தான் சொல்லுகிறது.


" இதுவரைக்கும் தினமும் தகவலைத் தான் சொல்லிக் கொண்டு இருந்தார்கள். இப்போது எமது காதிலே பூ சுத்தவும் ஆரம்பித்துவிட்டார்களா? என்று கேட்காதீர்கள். இவையெல்லாம் ஆதாரத்தோடு உள்ள விடயங்கள் தான். நீங்கள் கூட நிதானமாக யோசித்துப் பாருங்கள் உங்கள் வாழ்கையில் கூட சில சின்ன சின்ன அதிசயங்கள் நடந்திருக்கும். இதெல்லாம் தீவிரமான ஆராய்ச்சிக்குரிய விடயங்கள் அவ்வளவுதான் இப்போதைக்கு சொல்ல முடியும்.

இந்தத் தகவலைத் தெரிந்து கொண்ட பிறகு நம் நேயர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்பதைப் பற்றி ஒரு சிறிய கற்பனை. ஒரு நேயர் தன்னுடைய ரூமுக்குள்ளேயிருந்து அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தார். என்ன விடயம்? என்று விசாரித்தார் வீட்டுக்கார அம்மா. " அந்த ரூமில் யாரோ ஒரு ஆள் நிற்கின்றான்; அவனைப் பார்த்தால் என்னைப் போலவே இருக்கின்றான் என்றார் இவர். அந்த அம்மா எதுவும் கூறாமல் திரும்பி அடுப்பங்கரைக்குப் போய்விட்டார்.

" என்ன இது நான் எப்பேர்பட்ட விடயத்தைச் சொன்னேன்! நீ பாட்டுக்கு பேசம போற! என்று கத்தினர் இவர். உங்க ரூம்ல புதுசா ஒரு நிலைக் கண்ணாடியை நான் தான் வாங்கி வைத்தேன்! என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா பொலிஸாரால் வீதி போக்குவரத்து நடவடிக்கைகள் மறுசீரமைப்பு



(குருமன்காடு)

வவுனியா நகரப் பகுதியில் போக்குவரத்து பொலிஸாரால் வீதிப் போக்குவரத்து நடவடிக்கைகள் மறு சீரமைக்கப்பட்டன.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தலைமையில் போக்குவரத்து பொலிஸாரால் நேற்று முன்தினம் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா நகரில் அதிக சன நடமாட்டம் மிக்க பகுதிகளான பசார் வீதியில் இந்த மறு சீரமைப்பு முன்னெடுக்கப்பட்டது.

பசார் வீதியில் இருந்து பள்ளிவாசல் சந்தி நோக்கி செல்லும் போது 2,4,6,8 ஆகிய திகதிகளில் பசார் வீதியின் வலது புறமாகவும், 1,3,5,7,9 ஆகிய திகதிகளில் வீதியின் இடது புறமாகவும் வாகனங்கள் நிறுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரகாலப் பகுதியில் இதன் முன்னேற்றம் குறித்து அறிந்த பின் ஏனைய நகர வீதிகளையும் மறுசீரமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-6-250)

# கே.சீ.சீ வெற்றிக்கிண்ணம்-2024 கால் இறுதிக்கு T.C.C அணி தெரிவு

கே.சீ.சீ வெற்றிக்கிண்ணத் தொடரின் 16 ஆவது போட்டியில் T.C.C அணி கே.சீ.சீ அணியை 2 இலக்குகளால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சீ.சீ அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர். கே.சீ.சீ அணி 30 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 192 ஓட்டங்களை பெற்றனர். யனுதாஸ் 57, ஜெயரூபன் 54, பானுஜன் 16, சதயன் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களை பெற்றனர். பந்து வீச்சில் T.C.C அணியை சார்ந்த கோபிசன் 6 ஓவர்களில் 26 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குளையும் சுரேந்திரன் 6 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் சிவராஜ் 6 ஓவர்களில் 25 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

193 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய T.C.C அணி 29.1 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றனர்.

தர்ஸன்-41, லவன்-24, கோபிசன்-41, சுரேந்திரன்-32, ராஜ் ஆட்டமிழக்காது 16, துயின்தன் ஆட்டமிழக்காது 24 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.

கே.சீ.சீ சார்பில் துஸ்யந்தன் 6 ஓவர்களில் 48 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும் சத்யன், கஜானன், நிமலதாஸ் தலா 1 இலக்கினையும் கைப்பற்றினர். (நி-6)

# அஸ்வெசும பயனாளிகளை வலுவூட்டும் செயலமர்வு

(கிளிநொச்சி)

ஆசிய அபிவிருத்தி வங்கி அஸ்வெசும திட்டப் பயனாளிகளை வலுவூட்டும் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது.

அதனடிப்படையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அஸ்வெசும திட்டப் பயனாளிகளை வலுவூட்டும் வேலைத் திட்டம் தொடர்பில் துறை சார்ந்த திணைக்களத் தலைவர்களுக்கு அறிவூட்டல் கருத்தரங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தித் திணைகளத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த கருத்தரங்கில் வளவாளராக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சத்தியசீலன் கலந்து கொண்டிருந்தார்.

அஸ்வெசும திட்டப் பயனாளிகளை தங்கியிருத்தல் மனப்பாங்கிலிருந்து சுயமாக வாழக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள குறித்த முன்னோடித் திட்டத்திற்காக கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இத் திட்டமானது சமூக பாதுகாப்பு, சிறுவர்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் சார்ந்த சுகாதாரத் திட்டங்கள், கடன் திட்டங்கள், சமூக குழுக்களை மேம்படுத்தல், குடும்ப அபிவிருத்தி போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், மேலதிக அரசாங்க அதிபர்(காணி) இ.நளாஜினி, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் அ.எழிலரசி , கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர்கள், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்த திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3105

### லக்சி

மேடம், நீங்கள் பிறந்ததில் இருந்தே இப்படித் தானா இல்ல இந்த ஞானம் பாதியில வந்ததா?



### ஜீவா


டேய் தேவா நீ அதை பண்ணு இதை பண்ணு எதை வேணும் என்டாலும் பண்ணு



முதலில் call பண்ணினால் Answer பண்ணு

### மதன்

டிரைவிங் லைசன்ஸ் வாங்க எதற்கு மாசோக் பீஸ் கொண்டு வந்துருக்கிறாய்?



எட்டு போட்டு காட்டனும்ல சார் அதான்.

### ஆர்த்தி

அண்ணா உங்க இருபது ஆண்டு திருமண வாழ்க்கையில ஒரு நாள் கூட பொண்டாட்டியிடம் சண்டை போட்டது கிடையாதா எப்படி?



கல்யாணம் ஆன அன்றைக்கு தான் தெரிந்தது அவள் கராத்தேல பிளாக் பெல்ட் வாங்கினவள் என்று


### லெனின்

மரம் வளர்க்க சொன்னால் வளர்க்காமல் மரத்தை வெட்டவா செய்யுறீங்கள்?




வெளியேவா உன் மண்டைய பொளக்குறேன்

### கேமா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெய[illegible] பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 470





“அப்படியே செய்! பூங்குழலி! நீயும் இங்கே நிற்க வேண்டியதுதான். உன் தமையனைப் பற்றிக் கவலைப் படாதே. நான் பார்த்துக் கொள்கிறேன். நீ வந்த படகை எங்கேயோ விட்டிருப்பதாகச் சொன்னாயல்லவா? அதில் ஏறி இனி உன் வழியில் போகலாம். நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன். சேச்சே! கண்ணீரைத் துடைத்துக் கொள்! பார்க்கிறவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?”

இவ்வாறு கூறிவிட்டு இளவரசர் ஊமை ராணியின் அருகில் சென்று அவளுடைய பாதத்தைத் தொட்டு வணங்கப் போனார். அந்த மூதாட்டி அவரை தடுத்து நிறுத்தி உச்சி முகர்ந்து ஆசீர்வதித்தாள். அடுத்த நிமிடம் இளவரசர் கடலில் ஆயத்தமாக நின்ற படகில் பாய்ந்து ஏறிக் கொண்டார். கரையில் இருந்தவர்கள் படகைப் பார்த்துக் கொண்டே நின்றார்கள்.

இளவரசரும் போகின்ற படகிலிருந்து அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். எல்லோரையும் பொதுவாகப் பார்த்தாலும் அவருடைய கண்கள் பூங்குழலியின் கண்ணீர் வழிந்த முகத்திலேயே நிலைத்து நின்றது. அதிசயம்! அதிசயம்! தூர விலகிப் போகப் போக, உருவங்கள் சிறியனவாக வேண்டுமல்லவா? கரையில் இருந்த மற்றவர்களின் உருவங்கள் சிறியனவாகித்தான் வந்தன. ஆனால் பூங்குழலியின் முகம் மட்டும் வரவரப் பெரிதாகிக் கொண்டேயிருந்தது. இளவரசரின் அருகில் நெருங்கி வந்து கொண்டேயிருந்தது.

இளவரசர் உடம்பைச் சிலிர்த்துக் கொண்டார். கண்களை வேறுபக்கம் திருப்பினார். முதல் நாள் இரவு கண்ட கனவில் ஒரு நிகழ்ச்சி அவர் மனக்கண் முன்வந்தது. இளைய பிராட்டி குந்தவை, “தம்பி! உனக்காக இங்கே வானதி காத்திருக்கிறாள் என்பதை மறந்து விடாதே!” என்று கூறிய மொழிகள் கடல் அலைகளின் இரைச்சலுக்கிடையில் தெளிவாக அவருடைய காதில் கேட்டன.

### ஐம்பதாம் அத்தியாயம்
### “ஆபத்துதவிகள்”

இளவரசரைப் படகிலே பார்த்ததும் பார்த்திபேந்திரனுக்கு உண்டான ஆச்சரியம் சொல்லத் தரமன்று. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்து தரிசனம் தந்ததுமல்லாமல் ‘வேண்டிய வரங்களைக் கேள்’ என்று சொன்னது போலல்லவா இருக்கிறது? எனினும், இப்படி அவர் தனியாகப் படகில் வருவதன் காரணம் என்ன? பழுவேட்டரையர்களின் கப்பல்கள் என்ன ஆயின? தன்னுடைய கப்பல் இது என்று தெரியாமல், ஒருவேளை இது தான் அவரைச் சிறைப்படுத்த வந்த கப்பல் என்று எண்ணிக் கொண்டு வருகிறாரோ?

அப்படியெல்லாம் தவறான எண்ணத்துடன் வரவில்லையென்று விரைவிலேயே தெரிந்து போயிற்று. படகிலிருந்து கப்பலில் இளவரசர் ஏறியதும் பார்த்திபேந்திரன் கேட்கும் வரையில் காத்திராமல் நடந்த சம்பவங்களைச் சுருக்கமாகக் கூறிவிட்டார்.

“அராபியர் வசப்பட்ட கப்பலில் வந்தியத்தேவன் இருக்கிறான். அவனை எப்படியாவது தப்புவித்தாக வேண்டும்” என்றார்.

இளவரசர் கூறிய செய்திகள் பார்த்திபேந்திரனுக்கு மிகக் குதூகலத்தை உண்டாக்கின. “எல்லாம் நன்றாகத்தான் முடிந்திருக்கின்றன. அந்த முரட்டுப் பிள்ளை இவ்வளவு பதற்றமாகக் காரியம் செய்யாதிருந்தால் இன்னும் நன்றாயிருக்கும். ஆயினும் அவனை அயல்நாட்டாரிடம் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது. அந்தக் கப்பல் வெகுதூரம் போயிருக்க முடியாது. எப்படியும் துரத்திப் பிடித்துவிடலாம்” என்றான். பிறகு கலபதியைக் கூப்பிட்டு விவரத்தைக் கூறினான்.

“அதைப் பற்றி என்ன கவலை? காற்று இப்படியே அனுகூலமாக அடித்துக் கொண்டிருந்தால் சாயங்காலத்துக்குள் பிடித்துவிடலாம்! நம்மை மீறி அந்தக் கப்பல் எங்கே போய்விடப் போகிறது!

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கிழவர் கேட்ட கேள்வி!

பாண்டிய நாட்டை ராசராசன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் மனைவி ஒரளவிற்கு இசைஞானம் உடையவள் சிறந்த அழகியும் கூட.

தனக்கிருந்த கொஞ்ச நஞ்ச இசை ஞானத்தை வைத்துக் கொண்டே மிகுந்த பெருமையடைந்தாள் அரசியார். தன்னை மிஞ்சிய இசை ஞானமுள்ளவர்கள் யாரும் இல்லை என்பது அவள் எண்ணம்.

அரசியைப் புகழந்து அவளது சிறப்பை பாராட்டியே தங்கள் காரியங்களை



சாதித்துக் கொண்டது காக்கா கூட்டம் ஒன்று.

வருடா வருடம் கோயிலில் விழா நடைபெறும். அப்பொழுதெல்லாம் பாணபத்திரர் என்ற இசைக்கலைஞர் மிகவும் அழகாக இசை நிகழ்ச்சி நடத்துவார்.

அவர் இறந்த பின், அவரது மனைவி இறைவனைப் புகழ்ந்து பாடுவாள்.

ராசராசன் பதவிக்கு வந்த பிறகு, அவனது மனைவியான அரசியாரின் இசை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

பாணபத்திரரின் மனைவி மிகுந்த வேதனை அடைந்தாள். “சரி! நமக்கு விதித்தது இவ்வளவு தான்!” என சிலகாலம் ஒதுங்கி இருந்தாள்.

அந்த வருடமும் வழக்கம் போல் திருவிழா வந்தது. இறைவனை எப்படியாவது பாடித் துதிப்பது என்று முடிவு செய்தாள். வழக்கம் போல் அரசியாரின் இசைக் கச்சேரி கோலாகலமாக நடைபெற்றது. மக்கள் இசையை ரசித்துக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ஜனங்கள் மெல்ல எழுந்து செல்ல ஆரம்பித்தனர். அதைக் கண்டதும் மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னான்.

கோயிலில் ஒரு மூலையில் அமர்ந்து பாணபத்திரரின் மனைவி இறைவனைத் துதித்து பாடிக் கொண்டிருந்தாள். மக்கள் அவளது இசையில் மயங்கி அங்கே சென்றனர். இதைக் கேள்விப்பட்ட அரசியார் கொதித்துப் போனார்.

“அன்பே! என்னை கேவலப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவள் இப்படி நடந்து கொண்டாள். இவளுக்கு சரியான தண்டனை கொடுங்கள்!” என்றாள்.

பாணபத்திரரின் குடும்பத்திற்கு தன் தந்தையார் காலத்தில் கொடுக்கப்பட்ட மரியாதையை மன்னன் அறிவான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வேப்பம் பூ பூத்திருக்கு அதைப் பாராதிருப்பதேனோ!

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பது, அபிவிருத்தி செய்வது என்றெல்லாம் மாநாடு கூடி ஆராய்கின்றோம்.

ஆனால் உள்ளூர் உற்பத்திகள் இன்னமும் மந்த நிலையிலேயே உள்ளன.

ஆம், வேம்பு எங்கள் ஈழதேசத்தின் பெரும் சொத்து. நோய் தீர்க்கும் அருமருந்து. மிகச் சிறந்த தொற்று நீக்கி.

தவிர இலை, பூ, பிஞ்சு, காய், பழம், மரப்பட்டை, மரம், வேர் என அத்தனையும் எங்கள் ஆரோக்கியத்துடன் இரண்டறக் கலந்தவை.

ஒரு காலத்தில் மலேரியாக் காய்ச்சல் இலங்கை மக்களை வாட்டி வதைத்தபோது, மலேரியாக் காய்ச்சலுக்குரிய குளோரோகுயின், பிறிமா குயின் கண்டறியப்படுவதற்கு முன்னதாக, வேப்பம் பட்டையை அவித்துக் குடித்து மலேரியாக் காய்ச்சலை சுகப்படுத்திய வர்கள் நம் மக்கள்.

சுருங்கக்கூறின், மலேரியாப் பெருந் தொற்று கோரதாண்டவம் ஆடியபோது, எம் மக்களின் உயிரைக் காப்பாற்றிய எங்கள் வீட்டு முற்றத்து மாமருந்து வேம்பு என்றால் அது மிகையன்று.

உண்மை. கொரோனாத் தொற்று ஏற்பட்ட போதும் வேப்பம் பட்டையை அவித்துக் குடித்து கொரோனாத் தொற்றில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்டவர்கள் பலர்.

அதேநேரம் இப்போது எங்கள் தென்னை மரங்களை ஆக்கிரமித்துள்ள வெள்ளை ஈ தொற்றை அழிப்பதற்கு வேப்பம் எண்ணெய் சிறந்த மருந்து என சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இருந்தும் நாம் அதுபற்றி இம்மியும் கருசனைப்படாமல் இருக்கின்றோம்.

உண்மை. வேப்பம் பூவில் வடகம் செய்து அதனை நாளாந்த உணவில் சேர்த்து குருதியில் சீனியின் அளவு அதிகரிக்காமல் கட்டுப்படுத்திய எங்கள் முன்னவர்களின் வாழ்வியலை நாம் அடியோடு மறந்துவிட்டோம்.

இப்போது வடகம் என்றால் என்ன? என்று கேட்குமளவிலேயே நம் இளம் சமூகம் உள்ளது.

ஆம், எங்கள் வீட்டு முற்றத்தில், கோடிப் புறத்தில், வளவில், பொது வெளியில் உல்லாசமாகப் பரந்து கிடக்கின்ற வேப்பம் மரங்கள் சோ என்று பூத்துக் கிடக்கிறது.

இந்த வேப்பம் பூக்கள் எங்கள் ஆரோக்கியத்துக்காக காலம் நமக்குத் தந்த அருமருந்து.

இருந்தும் வேப்பம் பூவெடுத்து அதில் வடகம் செய்து அதனை உணவில் சேர்த்துக் கொள்வது பற்றி நாம் எவருமே கவனம் செலுத்தாமல் விட்டு விட்டோம்.

உண்மையில் வேப்பம் பூவில் வடகம் செய்து அதனை ஏற்றுமதி செய்வோமாக இருந்தால், அது நிறைந்த வருமானத்தை தந்தருளும்.

எனவே வேப்பம் பூ வடகம் எங்கள் உள்ளூர் உற்பத்தியாக ஊக்குவிக்கப்பட வேண்டும். அவற்றை ஏற்றுமதி செய்ய வேண்டும்.

இதுபற்றிய விழிப்புணர்வுகள் இங்கு அவசியமாகின்றன.

# ஊழல் ஆட்சியாளர்களின் இறுதி மே தினம் இதுவே

## ஜே.வி.பி தலைவர் அநுர

(கொழும்பு)

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த ஆட்சி தேவை எனவும், ஊழல் ஆட்சியாளர்களின் இறுதி மேதின கூட்டம் இதுவாகும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மே தின கூட்டத்தில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு முறையான சட்டத்தை மதிக்கும் சமூகமும்தேவை. இந்த நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான சிறந்த ஆட்சி தேவை. குற்றங்கள் நிறைந்த சமூகத்தை சரியான பாதைக்கு கொண்டு செல்வதற்கு ஒழுக்கமான அரசியல் சக்தி தேவை ஊழல் ஆட்சியாளர்களின் இறுதி மேதின கூட்டம் இதுவாகும்.

நாட்டில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த தேசிய மக்கள் சக்தி தயார். ஜனாதிபதிக்கு இன்று மக்கள் ஆதரவு இல்லை.

ஏனைய கட்சிகளுக்கு எதிராக நாம் தேசிய மக்கள் சக்தியை கட்டியெழுப்பவில்லை.

மக்கள் ஆதரவு எமக்கு உள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவு வழங்கிய பல்லாயிரக்கணக்கானவர்கள் இன்று எமது மே தின கூட்டணியில் பங்கேற்றுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்களும் உள்ளனர். இவர்கள் அனைவரும் தாமாகவே முன்வந்து எம்முடன் இணைந்துள்ளனர் என தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

### சம்பள முரண்பாடுகளை முன்னிட்டு அரச நிறைவேற்று அதிகாரிகள் இன்று சுகயீன விடுமுறை

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் கூட்டுக் குழு இன்று மற்றும் நாளை (03) சுகயீன விடுமுறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் நாடு தழுவிய சேவைகள் மற்றும் இணையான திணைக்கள சேவைகளை சேர்ந்த சுமார் 18,000 நிறைவேற்று அதிகாரிகளுக்கு தாக்கம் செலுத்தியுள்ள தொழில்சார் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கு அரசாங்கம் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என அரசாங்க நிர்வாக அதிகாரிகளின் கூட்டுக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7,10)

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாச

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதிவேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ போட்டியிடவுள்ளார்.

அதற்காக அவர் விரைவில் அமைச்சுப் பதவியில் இருந்து ராஜினாமா செய்யவுள்ளதாக அறியக் கிடைத்துள்ளது

சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன இது தொடர்பான அறிவிப்பொன்றை நேற்று வெளியிட்டுள்ளார்.

தொழிற்சங்க தலைவர் டி.பி.இளங்கரத்னவின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேற்குறித்தவாறான அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிடப் போவதில்லை. விஜயதாச ராஜபக்ஷ சுதந்திரக் கட்சியின் பெரும்பாலானோரின் விருப்பத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

அத்துடன் விஜயதாச ராஜபக்ஷவுக்கு பெரும்பாலான கட்சிகளின் ஆதரவு இருக்கின்றது.

நாங்கள் அவருக்கு முழு ஆதரவையும் அளிப்போம். அவர் இப்போது எம்மவர். அவருக்கு அமைச்சராக இருப்பதில் விருப்பம் இல்லை என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (நி-6)

### ரணிலுடன் கைகோர்த்த மொட்டு எம்.பி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி கயாஷான் நவநந்தன, ஐக்கிய தேசியக் கட்சியில் நேற்று இணைந்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் நவநந்தன, சுகாதார இராஜாங்க அமைச்சராகவும் சிறிது காலம் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## பேருந்தில் இறந்த முதியவர் அடையாளம்

(சாவகச்சேரி)

கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை வந்த பேருந்தில் பயணம் செய்த நிலையில் உயிரிழந்த முதியவர் நேற்று புதன்கிழமை அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தென்மராட்சி வரணிப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவரே மாத்தளை பகுதியில் உள்ள உறவினர்களுடைய வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் பேருந்துள்ளார்.

நேற்றுமுன் தினம் குறித்த முதியவர் கண்டி - யாழ்ப்பாண பேருந்தில் பயணம் செய்திருந்த நிலையில் நீண்ட நேரம் அசைவற்றுக் காணப்பட்டதால் சந்தேகமடைந்த நடத்துனர் அவரை தட்டி எழுப்பிய போதும் எழும்பாமையால் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் பேருந்தை நிறுத்தி அவரை பரிசோதித்த நிலையில் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-30)

## சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பிச்செல்ல முயன்ற 8 பேர் கைது

(மன்னார்)

தனுஷ்கோடி கடல்வழியாக படகில் சட்டவிரோதமாக இலங்கைக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கை தம்பதிகள் இருவர் மற்றும் இலங்கைக்கு தப்பிச் செல்ல உதவிய ஆறு பேர் என 8 பேரை கைது செய்த தங்கச்சிமடம் பொலிஸார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.


நேற்று புதன்கிழமை இரவு தங்கச்சிமடம் மாந்தோப்பு கடற்கரையில் இருந்து நாட்டுப்படகில் புறப்பட்டு தனுஷ்கோடி கடல் வழியாக வவுனியா தப்பி செல்ல திட்டமிட்டது விசாரணையில் தெரிய வந்ததையடுத்து இலங்கை தம்பதிகள் இருவர் மற்றும் இலங்கைக்கு தப்பிச் செல்ல உதவிய ஆறு பேர் என மொத்தம் எட்டு பேரை பொலிஸார் கைது செய்து தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் வைத்துள்ளனர்.

தங்கச்சிமடம் காவல் நிலையத்தில் உள்ள எட்டு பேரிடம் மத்திய, மாநில உளவுத்துறை, மரைன் பொலிஸார் மற்றும் சட்ட ஒழுங்கு பொலிஸார் அடுத்தடுத்து தனித்தனியாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைக்கு பின்னர் 8 பேரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக தங்கச்சிமடம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தின் முதலாவது 'டாக்டர்கள்'

## அமெரிக்கர் பயிற்றிய வைத்தியர்கள்



கா.இந்திரபாலா

1829 ஆம் ஆண்டு அமெரிக்காவின் Boston நகரில் இந்த ஆண்டின் ஒக்டோபர் மாதத்திற்கு உரிய இதழாக வெளிவந்த The Missionary Herald என்ற செய்தித்தாளில் கீழ்வரும் செய்தி கொடுக்கப்பட்டது (மொழிபெயர்ப்பு):
"Dr. Scudder உடைய கவனிப்பில் எட்டு அல்லது பத்து ஆண்டுகள் படித்தபின் Whelpley என்பவர் ஒரு மருத்துவராகவும் (physician) அறுவை சிகிச்சை வைத்தியராகவும் (surgeon) வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார். அவரிடம் நல்ல திறமை உண்டு. நாட்டில் பெருமளவு மருத்துவத் தொழில் (practice) செய்கிறார். சுதேச வைத்தியர்கள் குறைவாக உள்ளனர்."

Whelpley வேலைக்கு அமர்த்தப்பட்ட இடம் யாழ்ப்பாணத்து ஊராகிய வட்டுக்கோட்டையில் இருந்த அமெரிக்கமிஷன் நிலையம். இவர் 1828 இல் வட்டுக்கோட்டை செமினரியில் படிப்பை முடித்து வெளியேறிய 16 இளைஞர்களுள் ஒருவர்.

### யார் இந்த வைத்தியர்?

அமெரிக்கமிஷனரிமார் 1816 இல் யாழ்ப்பாணத்துக்கு வந்து தங்கள் பணியைத் தொடங்கிய போது ஐந்து மிஷன் நிலையங்களை (mission stations) நிறுவினர். அவற்றுள் ஒன்றாகிய தெல்லிப்பளையில் 1816 டிசெம்பரில் ஒரு பாடசாலையைத் தொடங்கினர்.

ஒரு சில மாதங்களில் அப் பாடசாலை ஓர் உறைவிடப் பள்ளியாக (boarding school) மாற்றப்பட்டு, ஆங்கிலமும் தமிழும் கற்பதற்கு வசதிகளுடன் மாணவர்கள் அங்கேயே தங்கி இருப்பதற்கும் வசதிகள் செய்யப்பட்டன.

இப் பள்ளியின் முதல் மாணவர்களுள் ஒருவராகச் சேர்ந்தவர் Philip M. Whelpley (வெல்ப்லீ) ஆவார். இவருக்குப் பெற்றோர் வைத்த பெயர் சந்தியோ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்க மிஷன் அமைத்த பள்ளிகளில் இலவசமாகக் கல்வி கற்கச் சேர்ந்த ஒவ்வொரு மாணவருக்கும் அமெரிக்காவில் ஒவ்வொரு நன்கொடையாளர் (donor) இருந்தார்.

மாணவனுடைய செலவுகளுக்கான பணத்தை நன்கொடையாளர் மிஷனுக்கு வழங்க, அக்கொடையாளியின் பெயர் அல்லது கொடையாளி கொடுத்த பெயர் மாணவனுடைய புதிய பெயராகக் கொடுக்கப்பட்டது. இவ்வாறே Whelpley என்ற மாணவர் தன் புதிய பெயரைப் பெற்றார். இவர் கொடையாளி நியூயோர்க்கில் இருந்த ஒருவர்.

உவெல்ப்லீ 1805 இல் ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர். ஆனால், அமெரிக்கருடைய பள்ளியில் படிக்கத் தொடங்கிய பின் அமெரிக்கமிஷன் போதித்த கிறிஸ்தவத்தில் ஈடுபாடு கொண்டு அம் மதப் பிரிவில் சேர்ந்து, மிஷனரிமாருடன் மதப்பரப்பலிலும் பங்கு கொண்டார்.

### மிஷனின் மருத்துவ சேவை

இம் மாணவர் எப்படிப் பின்னர் மருத்துவத் தொழில் புரிய முடிந்தது என்பதைக் கூறுமுன், அமெரிக்க மிஷன் நடத்திய மருத்துவ சேவையைப் பற்றிக் கூறுவது அவசியமாகும்.

அமெரிக்கமிஷன் முதன் முறையாக 1816இல் இலங்கைக்கு மிஷனரிமாரை அனுப்பியபோது, கல்வி வளர்ச்சிக்குப் பாடசாலைகளை அமைக்கும் நோக்கத்துடன் மக்கள் பிணியைத் தீர்க்க மருத்துவ சேவை செய்யும் நோக்கும் கொண்டிருந்தது.

இதனால், யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட நான்கு மிஷனரிமார்களுள் இருவர் அமெரிக்காவை விட்டுப் புறப்படுமுன், பிலடெல்பியாவில் இருந்த பிரபல மருத்துவ கல்லூரிக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அவர்களுள் ஒருவராகிய Edward Warren 1816 இல் தெல்லிப்பளையில் பணியாற்றத் தொடங்கினார்.

### முதலாவது வைத்தியசாலை

உவறென் (Warren) மிஷனரியார் வரும்போது அமெரிக்காவில் இருந்து குறிப்பிடத்தக்க அளவு மருந்துகளும் கொண்டு வந்திருந்தார். அவர் தெல்லிப்பளையில் வசிக்கத் தொடங்கிய நாட்களில் அவருக்கு மருத்துவ உதவி செய்யும் தகைமை இருப்பது ஊரில் பரவியது. இதன் விளைவாகப் பல நோயாளிகள் அவர் இல்லத்துக்கு வரத் தொடங்கினர்.

தெல்லிப்பளைக்கு வந்து சில மாதங்களுள், 1816 இலேயே அமெரிக்காவுக்குக் கடிதம் எழுதிய போது, "நோயாளிகள், நொண்டிகள், கண்பார்வை இழந்தோர்" எனப் பல வகைப்பட்டோர் தன்னிடம் வருவது பற்றி உவறென் மிஷனரியார் குறிப்பிட்டு, இவர்களைக் கவனிப்பதற்கு ஒரு நிறுவனம் தேவைப்படுகின்றது என அறிவித்தார்.

அமெரிக்காவில் இருந்து உதவி வரும் வரைகாத்திருக்காது, யாழ்ப்பாணத்தில் அப்பொழுது பணியாற்றிக் கொண்டிருந்த ஆங்கிலேயர் சிலர் தமக்குள் நிதிதிரட்டி, ஒரு சிறிய வைத்தியசாலையைக் கட்டுவதற்கும் அதற்குச் சில தளபாடங்களைப் பெறுவதற்கும் உதவினர்.

### ஒரு ஞாயிறு நிகழ்வுகள்

யாழ்ப்பாணத்துக்கு வந்து ஒரு சில மாதங்களுள் தெல்லிப்பளையில் ஒரு சிறு வைத்தியசாலையை அமைத்து, மேலைத்தேச மருத்துவ சேவையைத் தொடங்கிய உவறென் மிஷனரியார் எத்தகைய நிலைமையை எதிர்நோக்கினார் என்பதை உணர, மிஷனரிமாருடைய பதிவுகளில் இருந்து ஒரு நாள் நடந்த நிகழ்வுகளை எடுத்துக்காட்டலாம்.

பெப்ரவரி 23, 1817, ஞாயிற்றுக் கிழமை. காலை, ஒருவர் துலாவில் இருந்து விழுந்து காலை முறித்துக் கொண்டார். மிஷனரிமாருக்கு அது பற்றி அறிவித்ததும்அவர்கள் விபத்து நடந்த இடத்துக்குச் சென்று, விழுந்தவரை "அறுவைசிகிச்சை" உதவிக்காகத் தங்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். பிற்பகல், ஒருவர் மரத்தில் இருந்து விழுந்து விலா எலும்பையும் தோள்பட்டை எலும்பையும் முறித்துக் கொண்டார். அவரைத் தூக்கி மிஷனரிமாருடைய வண்டியில் வளர்த்தி, வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல உதவி கேட்டபோது அங்கு கூடிநின்றோர் விழுந்தவர் சாதி குறைந்தவர் என்றபடியால் அவரைத் தொட மறுத்தனர். இது தவறான செயல் என்று மிஷனரிமார் அவர்களுடன் உரையாடிய பின் ஒரு சிலர் முன் வந்து உதவ, விழுந்தவர் வண்டியில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பிற்பகல் மேலும் ஒரு விபத்து. இன்னொருவர் மரத்தில் இருந்து விழுந்து காயமடைந்தார்.

இவ்வாறு வைத்தியசாலையில் படிப்படியாக வேலை கூடியதும், 1817 மார்ச் மாதம் யாழ்ப்பாணத்து ஒல்லாந்தர் குடும்பத்தைச் சேர்ந்த, நன்கு தமிழ் பேசக்கூடிய George Koch என்ற ஓர் இளைஞன் (13 வயது) உவறென் மிஷனரியாருக்கு உதவி புரியச் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

### மருத்துவ மிஷனரி வருகை

இவ்வாறு மருத்துவ சேவைக்கான தேவை கூடிக்கொண்டு போன நேரத்தில், உவறென் மிஷனரியார் நோய் வாய்ப்பட்டு யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற நேரிட்டது.

இலங்கைக்கு வருவதற்கு அவர் தயாராகிக் கொண்டிருந்த போது அமெரிக்காவில் அவரைத் தாக்கிய இந்நோய் (அது காசநோய்/ tuberculosis என்று கருதப்படுகிறது) மீண்டும் ஓகஸ்ட் 1817இல் வந்தபோது, முதலில் கொழும்புக்கும், அங்கிருந்து தென் ஆபிரிக்கா வின் Capetown நகருக்கும் குண மடைய அனுப்பிவைத்தனர். ஆனால் அவர் குணமடையாது 1818 ஓகஸ்ட் மாதம் இறந்து விட்டார்.

யாழ்ப்பாணத்தில் மிஷனரிமாருடைய மருத்துவ சேவை வரலாற்றில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி 1819 இல் இடம்பெற்றது. இந்த ஆண்டு டிசம்பர் 11இல் ஜோன் ஸ்கடர் (Dr. John Scudder, M.D) என்ற அமெரிக்க மருத்துவ மிஷனரி (Medical missionary) முழு நேர வைத்தியராகப் பணியாற்றக் குடும்பத்துடன் யாழ்ப்பாணம் வந்தார். அவர்தான் மேலைத்தேசத்தில் இருந்து ஆசியாவுக்குச் சென்ற முதலாவது மருத்துவ மிஷனரி என்பதால் யாழ்ப்பாணத்துக்கு ஒரு தனி முக்கியத்துவம் கிடைக்கின்றது.



(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புங்குடுதீவில்...

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,33)

## பெருந்தோட்ட...

சட்டம் (அத்தியாயம் 136) பிரிவின் கீழ் தொழில் அமைச்சரின் உத்தரவின் மூலம், தொழிலாளர் ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இது தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று கொட்டகலையில் நடைபெற்ற இ.தொ.காவின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாய் கிடைக்கப்பெறும். இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ம-7,10)

## லாண்ட் மாஸ்டர்...

றுள்ளது.

இதில் கோண்டாவிலைச் சேர்ந்த ம.சதீஸ்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

சாவகச்சேரியில் இருந்து நாவற்குழி நோக்கிச் சென்று கொண்டிருந்த லாண்ட் மாஸ்ரரின் (இரு சக்கர உழவு இயந்திரம்) பின்புறமாக கொழும்பில் இருந்து யாழ் நோக்கிச் சென்ற ஹயஸ் வாகனம் மோதியதில் மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது.

இதில் லாண்ட் மாஸ்ரரில் பயணித்த ம.சதீஸ்குமார் படுகாய மடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

மேலும் விபத்தில் லாண்ட் மாஸ்ரர் சாரதி உட்பட லாண்ட் மாஸ்ரரில் பயணித்த மூவர் மற்றும் ஹயஸ் வாகனத்தில் பயணித்த பெண் ஒருவருமாக மொத்தம் நால்வர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

லாண்ட் மாஸ்ரரில் பயணித்தவர்கள் கச்சாய் பகுதியில் கொங்கிறீட் இடும் பணியில் இரவு ஈடுபட்டுவிட்டு காலையில் நாவற்குழி நோக்கி வேறு வேலைத்தளத்திற்கு செல்லும் வழியில் இவ் விபத்து சம்பவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,30,33,60)

## ஜனநாயக...

கேற்றலுடன் ஆரம்பமாகி தொடர்ந்து தலைமை உரை, விருந்தினர்களின் உரைகள் என்பன இடம்பெற்றது.

மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரான திருமதி செல்வி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினர்களான தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான சபா குகதாஸ், கஜதீபன், ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன், முன்னாள் பிரதேச சபையின் உறுப்பினர்கள், கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10)

## தமிழரசுக்...

கிழமை பிற்பகல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தொழிற்சங்கங்களுடன் இணைந்து தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளை ஏற்பாடு செய்த மே தினம் மக்களின் எழுச்சி பேரணியோடு நடைபெற்றது.

மே தின கூட்டத்துக்கு முன்பு எழுச்சி பேரணி மற்றும் தொழிலாளர்களின் அவலங்களை சித்தரிக்கும் வாகன ஊர்திகளும் கிளிநொச்சி சித்திவிநாயகர் முன்றலில் இருந்து மத்திய கல்லூரி மைதானம் வரை முன்னெடுக்கப்பட்டது.

இதில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன், பெருந்திரளான தமிழர்கள் இந்த மே தின நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-7,10)

## தமிழரசுக் கட்சி...

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 38 தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்போடும், ஆயிரக்கணக்கான பொதுமக்களின் பங்கேற்போடும் கிளிநொச்சியில் பேரெழுச்சியுடன் நடைபெற்ற தமிழ்த் தேசிய மே நாள் நிகழ்வுகளை ஒழுங்கமைத்து, அந்நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மே நாள் உரையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

கட்சியின் இயக்கத்தை முடக்கி, உட்கட்சி ஜனநாயகத்தை சவாலுக்கு உட்படுத்தி, கட்சிக்கு எதிராகத் தொடரப்பட்ட நீதிமன்ற வழக்கு நிலுவையில் இருப்பதால் அது தொடர்பில் கருத்துரைக்க முடியாத நிலை உருவாகியிருக்கிறது. கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவோடு தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டதால் என்னை இன்று நீதிமன்றில் நிறுத்தியிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கடந்தும் கட்சியைத் தளம்பலற்றுக்கொண்டு செல்வதற்காக நான் மேற்கொண்ட விட்டுக்கொடுப்புகள், எதிர்கொண்ட சமரசப் பேச்சுகள், அதுசார்ந்து நான் முன்னெடுத்த முயற்சிகள் என எல்லாவற்றையும் மக்களுக்கு ஆதாரபூர்வமாக வெளிப்படுத்த விரும்புகிறேன்.

அதே நிலைப்பாட்டின் அடிப்படையில், இந்த மாபெரும் மக்கள் மன்றத்தின் முன்னிலையில் இலங்கைத் தமிழரசு கட்சியின் எதிர்காலத்தையும் கட்சித் தலைமையின் எதிர்காலத்தையும் முன்நிறுத்தி எனது புரட்சிகர அரசியல் பயணத்தை ஆரம்பிக்கிறேன். என்றார். (ம-7,10)

## முள்ளிவாய்க்...

வன்னியன் சிலை முன்பாக ஆரம்பமான மேதின ஊர்வலம் அங்கிருந்து குருமன்காடு கலைமகள் விளையாட்டு மைதானம்வரை சென்றது. அங்கு மேதினக் கூட்டம் இடம்பெற்றது.

முன்னணியின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ், சட்டத்தரணி க.சுகாஸ் மற்றும் தொண்டர்கள், ஆதரவாளர்கள் பெருமளவான பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

பேரணியில் கலந்துகொண்டவர்கள் எங்கள் நிலம் எமக்கு வேண்டும், முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், வெடுக்குநாறி எங்கள் சொத்து போன்ற கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் 5462 — W 1 3 0 7 5 8
அத சம்பத — W 0 7 5 8 — சீட்டிழுப்பு இலக்கம் 037 — National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் - 1492 — A 05 32 77 81 A — Double Chance 11840

மெகா பவர் — திகதி 01/05/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1810 — R 08 35 41 62 75 — Double Chance 35433

லக்கி 7 VIP — திகதி 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0288 — L 9 5 9 2 4 6 L

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3704 — சீட்டிழுப்பு திகதி 01.05.2024 — M 18 36 38 57 — M — 02294

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.05.01 — சீட்டிழுப்பு இலக்கம் 0771 — மகரம் 01 18 41 59 மகரம் — 06178 — 28

உத்தியோகபூர்வ முடிவுகள் — 01.05.2024 — வெற்றி வாரம் 170 — வர்ணம் பச்சை — R 8 4 9 9 6 4 — 34441 — U — அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,461,452.00 — DLB

SUPER BALL — வெற்றி வாரம் 2436 — வர்ணம் சிவப்பு — 01.05.2024 — புதன்கிழமை — 06 35 56 62 M — 32836 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,040,618.40 — DLB

சனிதா — திகதி 2024.05.01 — வெற்றி வாரம் 4597 — 04 05 17 29 K — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,467,714.40 — 66895 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4148 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.05.01 — தினம் புதன்கிழமை — 15 36 37 56 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,517,524.80 — 513267 — DLB

S 29 19 46 57 71 — 1612 — 01.05.2024 — புதன்கிழமை — 369720 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 520,252,335.40 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.05.01 — வெற்றி வாரம் 2021 — வர்ணம் மஞ்சள் — 05 28 40 44 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,230,685.60 — 18398 — DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2262 — சீட்டிழுப்பு திகதி 2024.05.01 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.109,803,587.20 — 13 34 37 75 O — 461833 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி தனபாலசிங்கம் மணிமேகலை



சாந்தை பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் அரசடி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் மணிமேகலை அவர்கள் 29.04.2024 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தனபாலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பூலோகம் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகளும் சிறீவண்ணன் (ஜேர்மனி), நந்தீஸ்வரன் (கனடா), வசந்தரூபன் (கனடா), றஞ்சன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சங்கானை), தர்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாலனி (ஜேர்மனி), ராஜினி (கனடா), தர்மினி (கனடா), மஞ்சுளா (கணக்காளர் - சுகாதாரத் திணைக்களம், கிளிநொச்சி), செல்வரெட்ணம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ராகவி, தசானா (ஜேர்மனி), சஞ்சுதன், தேஸ்மிகா ஆகியோரின் ஆசை அப்பம்மாவும் மதுசன் (கனடா), அனோஜன் (கனடா) ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் காலஞ்சென்ற ஈஸ்வரி, ஞானம் மற்றும் கருணாகரன், சூரசங்காரன், ஜெயக்கொடி, பரமசிவம், நகுலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராமலிங்கம், சுப்பிரமணியம் மற்றும் மகேஸ்வரி, கலைவாணி, பஞ்சலிங்கம், தேவராணி, சாந்தநாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (02.05.2024) வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் சம்பில்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அரசடி வீதி,
இடும்பன் கோவில் சந்தி,
காலையடி, பண்டத்தரிப்பு.

தகவல் :
குடும்பத்தினர்
தொ.பே : 077 869 2124

(621)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0250)
076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

வேலையாட்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் பிரபல லிங்கம் கூல்பார் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும்.
- சிற்றுண்டி பரிமாறுபவர் (Supplier)
- காசாளர் (Cashier)
- சிட்டை எழுதுநர் (Bill Clark)
- துப்பரவு பணியாளர் (Cleaner)
(619)
லிங்கம் கிறீம் ஹவுஸ்
340C, பொன்னம்பலம் வீதி, யாழ்ப்பாணம். 077 711 1410

காணி விற்பனைக்கு
மன்னார் - ஆஸ்பத்திரி வீதிக்கு அருகாமையில் செபஸ்ரியன் வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு:
077 248 7204
(632)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0251)

CANADA VISA
- உங்கள் குடும்பத்துடன் பயணிக்கலாம்.
- வங்கி வசதிகள் செய்து தரப்படும்.
- 20 வருட அனுபவம். 1800 பேரை அனுப்பி வைத்துள்ளோம்.
- கிடைத்தவர்களை நேரடியாகப் பார்வையிடலாம்.
(511)
021 222 5686
076 424 7111
Expo Net Overseas Consultants
345, Kasthuriyar Road, Jaffna.

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
(C-0251)
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



மங்களகரமான திறப்பு விழா
சத்தியா ஜீவல்லர்ஸ்
43 ஆவது வருடத்தில் கால் பதிக்கும் நன்மதிப்பினைப் பெற்ற
சிறிநதியா நகை மாளிகையின் புதியதோர் உதயம்
சத்தியா ஜுவல்லர்ஸ்
ஒரே கூரையின் கீழ் மங்களகரமான ஆரம்பம்
03.05.2024 காலை 6 மணியிலிருந்து 7 மணிவரையான
சுப நேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.





(C-0247)
குறிப்பு : 10.05.2024 அக்ஷய திருதியை முன்னிட்டு
எம்மிடம் கொள்வனவு செய்யும்
தங்க நகைகளுக்குபெறுமதி மிக்க
பரிசில்கள் வழங்கப்படும்.
இன்றிலிருந்து முற்பதிவுகளை
மேற்கொள்ள முடியும் என்பதை
அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்
அக்ஷய திருதியை முன்னிட்டு விசேட விலைக் கழிவு



பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.
இணை நிறுவனங்கள்
NSR JEWELLERY சிறிநதியா நகை மாளிகை சத்தியா ஜீவல்லர்ஸ்
இல.136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 1332, 077 236 7416

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org